விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 24 வியாழக்கிழமை (07.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அமெரிக்கா- இலங்கைக்கிடையில்

# முறுகல் நிலைக்கான சமிக்ஞை!

## அமெ. அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

பல தசாப்தங்களாக தொடர்ந்த விடுதலைப் புலிகளுடனான போருக்கு இலங்கை அரசாங்கம் முடிபு கண்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் ஒரு முறுகல் நிலைக்கான சமிக்ஞைகள் தொடர்கின்றன. இலங்கையில் மனித உரிமை மற்றும் நல்லிணக்க நிலைவரங்களில் ஒரு உறுதியான முன்னேற்றம் காணப் படாவிட்டால் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புக்களில் ஒரு மட்டுப்பாடு தேவைப்படும் என்று அமெரிக்க அரசுத்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பற்றைக்குள் இருந்து சிசுவின் சடலம் மீட்பு


(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பாலாவி பகுதியில் பற்றை ஒன்றுக்குள்ளிருந்து சிசுவொன்றின் சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச் சிசுவின் தாயை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் கொடிகாமம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மீட்கப்பட்ட சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-5)

## வெளிவிவகார அமைச்சின் குழு ஐ.நா. நிபுணர் குழுவுடன் பேச்சு

### அறிவித்தார் அமைச்சர் பீரிஸ்




(கொழும்பு)

வன்னி இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று சந்தித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பி.பி.சியின் சிங்கள ஒலிபரப்பான சந்தேசிய சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக அரசாங்கமோ அல்லது பான் கீ மூனின் செயல (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடனான பேச்சுவார்த்தையிலிருந்து கூட்டமைப்பை வெளியேற்ற முயற்சி!

### சுரேஷ் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரட்டி வெளியேற்றுவதற்கு சில அமைச்சர்கள் தந்திரோபாயங்களை மேற்கொண்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரேமச்சந்திரன் சந்தேகம் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா சென்ற ஜனாதிபதிக்கு அரச மரியாதை கிடைக்கவில்லை

### இலங்கை குற்றச்சாட்டு: இந்தியா பதில்

(டில்லி)

இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான 10-வது உலகக் கிண்ண இறுதிப் போட்டியைக் காண இந்தியா சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய அரசாங்கத்தால் சரிவரக் கவனிக்கப்படவில்லை என அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியைக் காண மும்பை சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 30 ஆசன ஒதுக்கீட்டைக் கோரியிருந்த போதிலும் அவருக்கு 10 ஆசனங்களே வழங்கப்பட்டதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த இறுதிப் போட்டியைக் காண்பதற்கு இலங்கைக்கு அதிக அனுமதிச் சீட்டுக்களை வழங்கியிருந்தால் தாம் மகிழ்ச்சி அடைந்திருப்போம் என இந்தியாவிற்கான இலங்கைத் தூதரக உயர் அதிகாரி ஜெனரல் உப்பெக்கா சமரதுங்க இந்திய ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியுடனான அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றதன் பின்னர் இந்திய அணியுடனான இறுதிப் போட்டியைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கடலில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பிலிருந்து ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் மீட்கப்பட்ட இச்சடலம் நேற்று மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் சடலம் அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை இந்திய கடற்றொழிலாளர்கள் பயணித்த படகு ஒன்று காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்து, வெள்ளைக் கொடியுடன் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து இந்தியக் (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...

நல்லூர்,
சரவணா ரெக்ஸ்



இல. 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.

இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-2797)

## இரணைமடுச் சந்தியில் விபத்து இராணுவச் சிப்பாய் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் இரணைமடுச் சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இடம் பெற்ற வீதி விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முறிகண்டிப் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இராணுவத் (20ஆம் பக்கம் பார்க்க)

English பேசுறது
இப்ப ரொம்ப easy!

Dialog

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until April 30th 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## விஜயகலா எம்.பி வித்தகபுரத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே-223 வித்தகபுரம் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை இன்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வழங்கவுள்ளார்.

இதனால் வித்தகபுரம் மக்கள் அனைவரையும் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு காலை 9.00 மணிக்கு வருகை தருமாறு மேற்படிச் சங்கத்தலைவர் ராஜரட்ணம் ஸ்ரீதாமோதரராஜ் தெரிவித்தார். (ச-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# கிளிநொச்சியில் விவசாயபீடத்துக்கு அருகில் பொறியியல் பீடத்தை அமைக்க முடிவு

யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடத்தை கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் தொடங்குவதற்கான முடிபை யாழ்.பல்கலைக்கழக மூதவையும், பேரவையும் எடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக பதிவாளரினால் உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்பட்ட செய்தியறிக்கை வருமாறு,

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூதவையும், பேரவையும் பொறியியல் பீடம் ஒன்றை கிளிநொச்சியில் ஸ்தாபிப்பது என்றும் அதற்கான ஆரம்ப வேலைகளை இயன்றளவு விரைவில் தொடங்குவது என்றும் தீர்மானித்துள்ளன.

பொறியியல் பீடம் ஒன்றை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தொடங்கப்படுவதற்கான திட்டங்கள் பேராசிரியர் வித்தியானந்தன் உபவேந்தராக இருந்த காலத்திலேயே (1979ஆம் ஆண்டிலேயே) தீட்டப்பட்டன. 1979இல் யாழ். பல்கலைக்கழகத்தால் பேராசிரியர் ரி.சிவப்பிரகாசப்பிள்ளை தலைமையில் பேராசிரியர் அ.துரைராசாவையும் அங்கத்தவருள் ஒருவராகக்கொண்டு அமைக்கப்பட்ட 5 அங்கத்தவர் கொண்ட கல்வியாளர் குழுவொன்று பொறியியல் பீடம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் அப் பீடம் கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்தது.

இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்ட மூதவையும், பேரவையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கான வேண்டுகோளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிக்கு அனுப்பி வைத்தன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவ் வேண்டுகோளை ஆராய்ந்து பரிந்துரை செய்வதற்கென நான்கு தொழில்சார் நிபுணர்களையும் யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் அல்லது அவர் பிரதிநிதியொருவரையும் உள்ளடக்கிய ஐந்து அங்கத்தவர் கொண்ட குழுவொன்றை நியமித்தது.

அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் சார்பில் பேராசிரியர் க.குணரத்தினம் அவர்கள் இக் குழுவின் அங்கத்தவராகத் செயற்பட்டார்.

இக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்மொழிவை ஆராய்ந்து அதனை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அது கிளிநொச்சியில் அமைய வேண்டும் என்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு 1988 ஆம் ஆண்டு பரிந்துரை செய்தது.

பேராசிரியர் துரைராசா 1990ஆம் ஆண்டு உபவேந்தராக பதவி ஏற்றபின்னர் பொருளியல் பீடம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளைத் தொடங்கவும் பீடத்தின் அமைப்பு பற்றிய விபர அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கும் பேராசிரியர் வி.நவரட்ணராஜா பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டார்.

பேராசிரியர் நவரட்ணராஜா தயாரித்த விபர அறிக்கைகள் பல்கலைக்கழகத்தில் மூதவையினதும், பேரவையினதும் ஏற்புடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் அன்று நிலவிய உள்நாட்டுப்போர் நிலைமை காரணமாக பொறியியல் பீடம் அமைப்பது பிற்போடப்பட்டது.

பின்னர் 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமதான சூழலில் வெளிநாட்டில் வாழும் பரதன் என்பவர் கேம்பிரிட்ச் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் இருவரின் உதவிகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்றை தொடங்குவதற்கான முன்மொழிவொன்றை அரசாங்கத்திடம் முன்வைத்தார்.

அதே காலகட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூதவையால் பேராசிரியர் குமாரவடிவேல் தலைமையில் நியமிக்கப்பட்ட அறுவர் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று மீளவும் பரிந்துரை செய்ததுடன் அதற்கான விபர அறிக்கையையும் தயாரித்தளித்தது.

பல்கலைக்கழகத்தின் மூதவையும், பேரவையும் இவ்வறிக்கையை ஏற்றுக்கொண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அதனை சமர்ப்பித்தது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பொறியியல் கற்கைக்கான நிலைக்குழு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை தொடங்குவதற்கான பரிந்துரையை வழங்கிய நிலைமையிலும் மீண்டும் தொடங்கிய போர் நிலைமையால் பொறியியல் பீடம் அமைப்பது கைகூடவில்லை.

இன்று போர் முடிபுற்ற நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூதவையும், பேரவையும் தமது சமூகக் கடமையை நிறைவேற்றும் நோக்குடனும் பீடத்தை அமைப்பதற்கு ஏற்படக் கூடிய செலவீனங்களை குறைக்கும் நோக்குடனும் பொதுவான செலவீனங்களை விவசாயப் பீடத்துடன் பங்கிடக் கூடிய வாய்ப்பையும் முன்னைய குழுக்களின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு பொறியியல் பீடத்தை மிகவிரைவில் கிளிநொச்சியில் விவசாய பீடத்துக்கு அருகில் தொடங்குதவதற்கான முடிபை எடுத்துள்ளதுடன் அதற்கான விபர அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்கு ஓரிரு வாரங்களில் சமர்ப்பிப்பதென முடிபு செய்துள்ளது. (ச)

# இந்தோனேசியப் படையினருடன் இராணுவத் தளபதி சந்திப்பு

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இந்தோனேசிய படைத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு திரும்பியுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த 30ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 2ஆம் திகதிவரை இந்தோனேசியாவில் தங்கியிருந்த லெப். ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய இப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியப் படைத்தளபதி ஜெனரல் ஜோர்ஜ் ரொய்சுட்டாவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது பல முக்கிய விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாகவும் இராணுவத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்தை தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற தொனிப்பொருளில் படைத்தரப்பு நடத்தவுள்ள போர் கருத்தரங்கில் இந்தோனேசிய படைத்தரப்பினர் கலந்து கொள்வார்கள் என இந்தோனேசிய படைத்தளபதி ஜெனரல் ஜோர்ஜ் ரொய்சுட்டா இச்சந்திப்பில் கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்காலத்தில் இரு நாட்டு படைத்தரப்பினருக்கும் பயிற்சி வசதிகளை பரிமாற்றம் செய்துகொள்வது குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இந்தோனேசியாவில் உதவி பாதுகாப்பு அமைச்சர் ஜெப்ரி ஜப்சுதீனையும் இந்தோனேசியாவின் தேசிய பாதுகாப்புப் படைகளின் தலைமைத்தளபதி அகஸ் சுகார்டோனோவையும் இராணுவத்தளபதி ஜெயகத் ஜெயசூரிய சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (ச-5)

**மகாதேவா ஆச்சிரம இல்லத்திற்குரிய இரணைமடுக் குளத்தின் கீழான தண்ணீர் பங்கு- ஏலவிற்பனை - 10.04.2011**

மேற்படி ஏலம் 10.04.2011 காலை 10.00 மணிக்கு ஜெயந்தி நகரில் உள்ள மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் நடைபெறும்.
ஒரு ஏக்கருக்குரிய (1Acre) ஆகக் குறைந்த விலையானது 7500/= ஏலம் விடப்படும்.
ஏலத்தில் எடுப்பவர்கள் அன்றைய தினமே முழுப்பணத்தினையும் செலுத்தி பங்கினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். (T.P- 0772463027)

தி.இராசநாயகம்
தலைவர்.

மகாதேவா
சைவ சிறார் இல்லம்
கிளிநொச்சி.

(சி-2887)




**வீடு வாடகைக்கு**

Chundukuli, கச்சேரிக்கு அருகாமையில் தனி வழிப் பாதையுடன் Large room, Varanda, Toilet வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
பெண்பிள்ளைகள், தாயும் மகளும் விரும்பத்தக்கது.
Tel :- 0750828308, 0715360865
(4417)

**விற்பனைக்கு**

Pleasure
Red Colour
VF-16000 km
Rs. 112,000 /=
Mobile No - 0772726635
(4422)

**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு :- 0777393158
(சி-2883)

**காணி விற்பனை**

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் லோட்டன் றோட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு, கடை கட்டுவதற்கு உகந்தது.
தொடர்பு: 0774200304
(4402)

# இன்று ஒரு தகவல்

## பணம் - பதவி- புகழ்

ஒரு மனிதனுக்கு மூன்று விதங்களில் கர்வம் உண்டாவதற்கு வாய்ப்பிருக்கிறது. அவைதான் பணம்– பதவி–புகழ்.

பணம் அதிகமாக வந்தாலும் 'கர்வம்' வரலாம். பெரிய பதவி கிடைத்தாலும் கர்வம் வரலாம்.புகழ் அதிகரித்தாலும் கர்வம் வரலாம்.

இந்த மூன்று வகையான கர்வத்திற்கும் இடம் கொடுக்காமல் இருக்கிறார்களே, அவர்கள் தான் சிறந்த மனிதர்கள்.

ஒரு பெரிய பொறுப்பில் இருப்பவர்களுக்கு கர்வம் வந்துவிடக் கூடாது. அப்படி வந்தால் அது எல்லோருக்கும் இடைஞ்சலாக முடியும்.

ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் தன் தலைநகரை சுற்றி வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் ஓரிடத்தில் ஓர் அழகான நிலத்தைக் கண்டார். ஆஹா! இந்த இடத்தில் நமக்கென்று ஒரு மாளிகை கட்டினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தார்.

உடனே அவர் அந்நிலம் யாருக்கு சொந்தம் என்று விசாரிக்கச் சொன்னார். "அந்த இடம் வயதான பெண்மணி ஒருவருக்கு சொந்தமானதாம்." அந்த அம்மாதான் அதில் ஒரு குடிசையைப் போட்டுக் குடியிருந்து கொண்டிருக்கிறார் என்ற தகவல் அரசருக்கு தெரிவிக்கப்பட்டது.

சரி அந்த நிலத்திற்கு ஒரு விலை நிர்ணயம் செய்து அந்த விலையை அவரிடம் கொடுங்கள் என்று அரசர் உத்தரவிட்டார்.

ஆனால் அம்மூதாட்டி "இது எங்கள் பூர்வீக இடம் இதை விற்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டாள். "சரி, இரண்டு பங்கு விலை கொடுக்கிறோம்" என்று அரண்மனை ஆட்கள் கூறினார்கள்.

பாட்டி அதற்கும் சம்மதிக்கவில்லை. இதைக் கேள்விப் பட்டதும் அரசருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் ஆட்களைக் கூப்பிட்டு, "உடனே போய் அந்தக் குடிசையைப் பிரித்து எறியுங்கள் என்று கோபமாகக்கத்தினார். குடிசை பிரித்து எறிந்து இடிக்கப்பட்டது. அந்த வயதான மூதாட்டியை அந்த இடத்தை விட்டே துரத்தி விட்டார்கள். அவ்விடத்தில் அரசரின் விருப்பப்படியே ஒரு மாளிகையைக் கட்டினார்கள்.

அம்மூதாட்டி... பாவம்... அரசரே இப்படிச் செய்தால் யாரிடம் போய் முறையிட முடியும்? ஒரு ஞானியிடம் சென்று அம்மூதாட்டி தனக்கு நேர்ந்த கஷ்டத்தைத் தெரிவித்தாள். ஞானி மூதாட்டி கூறியதை மனதில் வைத்துக் கொண்டார்.

ஒரு நாள் அரசரே இந்த ஞானி இருந்த இடத்துக்கு வந்து சுவாமி நான் புதிதாக ஒரு மாளிகை கட்டியிருக்கிறேன். தாங்கள் அதை ஒரு முறை வந்து பார்க்க வேண்டும்" என்று பணிவுடன் வணங்கிக் கேட்டுக் கொண்டார். ஞானியும் அதற்குச் சம்மதித்தார்.

ஒரு நாள் அரசரின் அழைப்பிற்கிணங்க ஞானி அந்த மாளிகைக்குச் சென்றார். ஆனால் அவர் சும்மா போகவில்லை. ஒரு கழுதையும் ஓட்டிக் கொண்டு போனார். அத்துடன் சில கோணிப் பைகளையும் தன்னுடன் எடுத்துச் சென்றார்.

இவற்றையெல்லாம் பார்த்த அரசர், 'இது என்ன மாளிகைக்கு வாருங்கள் என்று அழைத்தால், இவர் கழுதையோடு சாக்குப் பைகளுடன் வருகிறாரே" என எண்ணி ஆச்சரியப்பட்டார். எனவே, அவர் ஞானியிடம் "எதற்காக இதெல்லாம்?" என்று வினாவினார்.

உங்களுடைய தோட்டத்திலிருந்து கொஞ்ச மண் எடுத்துப் போகலாம் என்று நினைக்கிறேன்.அதற்கு தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் ஞானி.

அதைக் கேட்ட அரசர் "இது என்ன வேடிக்கையான வேண்டுகோளாக இருக்கிறது." என்று எண்ணினார்.

இருந்தாலும் "கொஞ்ச மண்தானே கேட்கிறார். எடுத்துக் கொண்டு போகட்டும்" என்று நினைத்து "சரி" என்று அனுமதியும் அளித்தார்.

அந்த ஞானி தோட்டத்திற்கு சென்று, மண்ணை வெட்டி, கோணிப் பைகளில் நிரப்பினார். பின் அவர் அரசரைப்பார்த்து கொஞ்சம் இங்கே வந்து இந்த மண்மூட்டையைத் தூக்கி கழுதையின் முதுகில் வைக்க உதவுங்கள் என்று சொல்லி அழைத்தார்.

அரசரும் அதற்கு ஒப்புக் கொண்டு மண்மூட்டை இருந்த இடத்திற்குச் சென்று மண்மூட்டையைத் தூக்கி பார்த்தார். அவரால் தூக்க முடியவில்லை. திணறினார்.

அப்போது ஞானி அரசே இந்த ஒரு கோணி மூட்டை மண்ணையே உங்களால் தூக்க முடியவில்லையே... அந்தக் கிழவியிடமிருந்து அநியாயமாக அபகரித்த இந்தத் தோட்டம் முழுவதையுமே சுமக்க முடியும் என்று ஆசைப் படுகிறீர்களே ... அது உங்களால் முடியுமா? என்று கேட்டார்.

அரசர் யோசித்தார். தன் செயலுக்காக வருந்தினார். மூதாட்டியை உடனே வரவழைத்தார். அந்த மூதாட்டியிடம் "அம்மா நான் தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் இன்று முதல் இந்த மாளிகையும் தோட்டமும் உங்களுக்குத்தான் சொந்தம்" என்று கூறினார்.

போகும்போது இந்த உலகத்திலிருந்து நாம் எதைக் கொண்டு போகப் போகிறோம்? ஆதலால் நாம் ரொம்பவும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை அடம்பிடிக்க வேண்டியதில்லை கர்வப்பட வேண்டியதில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மயானங்களில் துப்புரவு பணிகள்

## இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள மயானங்களைத் துப்புரவு செய்யும் பணி இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மயானங்களிலுள்ள பற்றைக் காடுகளை துப்புரவு செய்வதோடு அதை அழகுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 'நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள சகல மயானங்களையும் துப்புரவு செய்யும்பணி இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்தோடு சபைக்குட்பட்ட ஏனைய பகுதிகளில் உள்ளபற்றைக்காடுகளையும் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## அதிபர் பதவி வெற்றிடம்

தீவக கல்விவலயத்திற்குட்பட்டயா/வேலணை மத்திய கல்லூரியில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் நிலவுகிறது.

இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயப்பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையை (தரம் I, தரம் 2-I, தரம் 2-II) சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.அதிபர் தரத்தினை சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து வேறு வலயத்தில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரீசிலிக்கப்படும்.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்படாத விடத்து கடமை நிறைவேற்று அதிபர் பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையைச்சேர்ந்தவர்களின் (வகுப்பு-1 வகுப்பு -2-I) விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவத்தினை தீவகக்கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 30.04.2011 என தீவக கல்விவலயக்கல்விப்பணிப்பாளர் வி. இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவையினால் நடாத்தப்படும் "மனித மேம்பாட்டுக்கு அனைத்துச் சமயங்களும் கூறும் உண்மைகள்" எனும் கருத்தரங்கு-1 நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்துசமயம் தொடர்பாக , வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் ,பௌத்தமதம் தொடர்பாக வணபிதா மீககயந்துரே ஸ்ரீ விமல தேரர் , கிறிஸ்தவம் தொடர்பாக வணபிதா து.து.ஜெயக்குமார் ,இஸ்லாம் தொடர்பாக மௌலவி பி.ஏ.எஸ். சுபியான் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா. | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 130 | 100 | 90 |
| தக்காளி | 80 | 130 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 40 | 80 | 70 |
| கரட் | 120 | 200 | 140 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 30 | 50 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 70 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 80 |
| பயற்றங்காய் | 40 | 60 | 100 |
| லீக்ஸ் | 90-100 | 100 | 110 |
| பீற்றூட் | 45 | 50 | 50 |
| கறிமிளகாய் | - | 120 | 130 |
| முருங்கைக்காய் | - | 600 | 450 |
| போஞ்சி | - | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 25 |
| தேசிக்காய் | 70 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

## இராசி பலன்

07.04.2011
(பங்குனி 24, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 2.07 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 10.54மணிவரை
இராகுகாலம் 1.38-3.08 மணிவரை
சுபநேரம் 7.38-9.08 மணிவரை
கார்த்திகை விரதம்
உலக நலவாழ்வுதினம்

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** எந்த வேலையும் நாளை எனத் தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியுண்டு.

**மிதுனம்** நண்பர்களின் சில தேவைகளுக்காக அலைய நேரிடலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், உங்களிடம் உதவிகேட்டு சிலர் வரலாம், சயனசுகக் குறைவுண்டு.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிங்கம்** தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தூரதேச செய்தி மனதை மகிழ்விக்கும்.

**கன்னி** தடைகள் விலகி காரியம் கைகூடும், தொழில் முன்னேற்றத்தில் மங்கையர்வழி ஒத்துழைப்புக் கிடைக்கும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**துலாம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் கைகூடும், கூட்டாளிகள் உங்களுக்கு நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்,வீடுகட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும், தேக நலன் ஆரோக்கியமாக இருக்கும்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்துசேரும்.


**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும், தனவிரயம் ஏற்படும், உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பிரயாண அனுகூலமுண்டு.

வளவன்







யாழ்ப்பாணம் பீப்பிள் லீசிங் கம்பனியின் கன்னாதிட்டி கிளையின் புதிய கட்டிடத்தை அக்கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே திறந்து வைப்பதையும், நெல்லியடி மக்கள் வங்கிக்கிளையில் பீப்பிள் லீசிங் கம்பனி சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது வாடிக்கையாளர் ஒருவருக்கு முச்சக்கரவண்டி வழங்கப்படுவதையும், மானிப்பாய் கிளையில் பேருந்து ஒன்றிற்கான ஆவணங்களை கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- விதுரன்)

# இங்கிலாந்தில் விளையாட முரளிக்கு விசா கிடைத்தது

பிரித்தானிய புதிய விசா விதிகள் குறித்து கவலை கொண்டிருந்த இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இங்கிலாந்து பிராந்திய அணியில் விளையாடுவதற்கான பிரித்தானிய தொழில் அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளதாக அவரின் முகாமையாளர் குஷில் குணசேகர நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் குளோசெஸ்டஷயர் அணியில் எதிர்வரும் யூன் மாதம் முரளி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனின் புதிய விதிகளின் படி அங்கு தொழில் புரிவோர் ஆங்கில மொழி பரீட்சை ஒன்றுக்கு கணனி மூலம் தோற்ற வேண்டும் ஆனால் முரளிதரன் தான் கணனி மற்றும் பரீட்சை குறித்து அச்சம் கொண்டுள்ளதாக முன்னர் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் இங்கிலாந்து பிராந்திய போட்டிகளுக்கு முன்னதாக இந்திய பிரிமியர் லீக் போட்டியில் விளையாடுவதற்காக முரளி புதன்கிழமை இந்தியாவுக்கு பயணமாக வேண்டியிருந்ததால் அவரின் பிரித்தானிய விசாவை துரிதமாக வழங்க பிரித்தானிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

தனக்கு விரைவாக உரிய விசா வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக பிரித்தானிய அதிகாரிகளுக்கு முரளி நன்றி தெரிவிப்பதாக அவரின் முகாமையாளர் குஷில் குணசேகர தெரிவித்துள்ளார். (ச-5)

# சட்டவிரோத மணல் ஏற்றலை தடுத்தவர் தாக்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர்களை தடுத்தவர் அடிகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பரந்தன் குமரபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா யோகலிங்கம் (வயது 45) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

5 பேர் கொண்ட குழுவொன்று லொறி ஒன்றில் குறித்த பிரதேசத்தில் மணல் ஏற்ற முற்பட்டபோது குறித்த நபர் அவர்களை தடுத்துள்ளார்.

இதனையடுத்து அவர்கள் இரும்புக்கம்பியால் பிரஸ்தாப நபரை பலமாகத் தாக்கியுள்ளனர். சம் பவத்தையடுத்து அனைவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

காயமுற்ற நிலையில் இருந்தவரை அயலவர்கள் மீட்டு கிளிநொச்சி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று அதிகாலை 3 மணிக்கு கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (ச-6)

# பொதுக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அலம்பில் திருமுருகன் ஆலயத்தில் இன்றுமாலை 4 மணிக்கு அப்பிரிவு கிராம உத்தியோகத்தர் தலைமையில் பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் இவ்வாலய கும்பாபிசேகம் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பிரதித் தலைவர் பதவியிலிருந்து மஹேல ஜெயவர்த்தனா விலகல்

இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதி தலைவர் பதவியிலிருந்து தான் விலகியுள்ளதாக மஹேல ஜெயவர்த்தனவினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அதன் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார். உலகக் கிண்ண போட்டியை அடுத்து மஹேல தனது பிரதித் தலைவர் பதவியை விட்டுவிலகுவதாக தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் நேற்று காலை கடிதமொன்றை சமர்ப்பித்த மஹேல ஜெயவர்த்தனா, தான் பதவியிலிருந்து விலகுவதாகவும் அந்தப் பதவியில் நிலைத்திருக்க தான் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார் என்று நிசாந்த ரணதுங்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒருநாள் சர்வதேச போட்டி மற்றும் இனிவரும் போட்டிகளுக்கான அணித் தலைவர் பதவியலிருந்து குமார் சங்கக்கார நேற்றுமுன்தினம் ராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பிளேக்கின் விஜயம் ஒத்திவைப்பு

மத்திய மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் றொபர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு அவர் இலங்கை வருவார் என ஆசியன் ட்ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் ஒருவர், றொபர்ட் பிளேக்கின் விஜயத்திற்கான திகதி குறித்து இன்னமும் அறிவிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான மனித உரிமைகள் ஆலோசனைக்குழு தமது அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னரே அவர் இலங்கை வருவார் எனவும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து அவர் இலங்கையை வலியுறுத்துவார் எனவும் செய்தி வெளியாகியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ச-5)

# இலங்கை கிரிக்கெட் சபை தேர்வுக்குழு ராஜினாமா

இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்வுக் குழு தனது ராஜினாமாக் கடிதத்தை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கையளித்துள்ளதாக அக்குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்று ஊடகங்களுக்கு வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்கக்கார மற்றும் பிரதித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா ஆகியோரின் ராஜினாமா விவகாரங்கள் தொடர்பில் மேற்படி தேர்வுக்குழு ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் 20-20 கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக்கல்லூரி நடத்தும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி, நோயல் விமலேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் நான்காவது தொடர்ச்சியான ஆண்டுகளாக நடைபெறுகின்றது.

இந்த ஆண்டு கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் முன்வைக்கப்பட்டிருக்கும் இச் சுற்றுப் போட்டி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி ஆகிய மைதானங்களில் இன்று தொடக்கம் நாளை மறுதினம் 9ஆம் திகதிவரை நடத்தப்படவிருக்கிறது.

இன்று நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன. இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து 9 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பிற்பகல் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

அதேவேளை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் காலை 9 மணிக்கு நவீல்ட் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணியும், பிற்பகல் சென்.சேவியர் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ச-5)

# பயிற்றுவிப்பாளராக பணியாற்றுமாறு ஸ்டுவெட் லோவிடம் கோரிக்கை

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இங்கிலாந்து சுற்றுலாவுக்கான இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்றுநராக பணியாற்றுமாறு அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஸ்டுவெட் லோ கோரப்பட்டுள்ளார்.

இதுவரை இலங்கை அணியின் பயிற்றுநராக அவுஸ்திரேலியாவின் ட்ரவோர் பெய்லிஸ் பணியாற்றினார். அவரின் கீழ் 2009 நவம்பர் முதல் உதவிப் பயிற்றுநராக ஸ்டுவெட் லோ பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. பெய்லீஸின் பின்னர் முழுநேர பயிற்றுநராக ஸ்டுவெட் லோ பணியாற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த 4 வருடங்களாக அணியின் பயிற்று நராக கடமையாற்றிய ட்ரவோர் பெய்லீஸ் உலகக்கிண்ணப் போட்டிகளுடன் பயிற்றுநர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இந் நிலையில் இடைக்கால பயிற்றுநராக பணியாற்றுமாறு நாம் ஸ்டுவெட் லோ விடம் கோரியுள்ளோம் என இலங்கை கிரிக்கெட் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த இரு நாட்களில் இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார, உப தலைவர் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் ராஜினாமா செய்தனர். தேர்வுக்குழுவினரும் நேற்று ராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கான வெளிநாட்டு கடன்கள்



## விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு ஆதரவு

இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களமானது இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் செயற்றிட்டங்களுக்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கடன் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?

### 1ஆம் வகை

கம்பனியொன்றின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும்.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுகளை மேற்கொண்டுள்ள வணிகப் பொருள் ஏற்றுமதியாளர்கள
- சுற்றுலா
- சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு நிலையங்கள்
- இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்
- கப்பற்படுத்தல்
- உள்நாட்டு வான் பயணம்

### 3ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களிலுள்ள தனி உடமையாளர்களுக்கு, உடமையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- ஆலோசனைப் பணிகள்
- அரச அதிகாரசபைகளுடன் பதிவு செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- விளம்பரம் செய்தல், பிரசுரித்தல், புகைப்படமெடுத்தல்
- விளையாட்டுகள் தொடர்பான பணிகள்
- நவீன உடைகளின் வடிவமைப்பு மற்றும் திரைப்படத் தொழில்
- பொழுதுபோக்குக் தொழில் (சங்கீதம், நடனம், நிகழ்ச்சி முகாமைத்துவம் போன்றவை)

### 2ஆம் வகை

பின்வரும் வியாபாரங்களில் ஈடுபடும் கம்பனிகளுக்கு கம்பனியின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களிலிருந்து கடன்களை மீளச் செலுத்தும் இயலளவைப் பொருட்படுத்தாது அனுமதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படும்.

- வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் பெருந்தோட்டம்
- மீன்பிடி
- உணவு பதனிடல்
- கல்வி மற்றும் பயிற்சி
- வலு உருவாக்கம் மற்றும் கடத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
- மருத்துவமனைகள் மற்றும் நலம் மற்றும் நலக் கவனிப்புப் பணிகளின் வழங்கல்
- வர்த்தக ரீதியிலான வீடமைப்பு நிர்மாணம்
- வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம்
- பாரிய போக்குவரத்து
- சுற்றாடல் பாதுகாப்பு
- பல்பொருள் அங்காடி
- ஊர்திகளைப் பொருத்துதல்
- துறைமுகங்கள் மற்றும் துணைப் பணிகள்
- கைத்தொழில் பூங்காக்கள்
- நகர உட்கட்டமைப்பு (நீர் விநியோகம், சுகாதார மற்றும் வடிகால் செயற்றிட்டங்கள்)
- தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்குவோர்
- பாரிய கைத்தொழில்கள் மற்றும் தயாரிப்பு

## கடன் வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் யார் ?

- பன்னாட்டு வங்கிகள் அல்லது நிதிக் கம்பனிகள்
- பல்புடை நிதியியல் நிறுவனங்கள்
- கடன்பெறும் கம்பனிகளின் வெளிநாட்டு பங்குடமையாளர்கள் அல்லது தாய்க் கம்பனிகள்
- ஏற்றுமதிக் கொடுகடன் முகவர்கள்
- தனிப்பட்ட கடன்வழங்குநர்கள்: வதியும் நாட்டில் அவன்/ அவள் வரி செலுத்துவர் என்ற சான்றுடன் கூறப்பட்ட வங்கியுடன் அவன்/ அவள் கணக்கைப் பேணுவதாக அவனது/ அவளது வதியும் நாட்டின் வங்கியாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை அளிக்குமிடத்து

## கடன்களுக்காக குறித்துரைக்கப்பட்ட நியதிகள் எவை?

**கடன் பெறவேண்டிய ஆகக் கூடிய தொகை:** ஐ.அ.டொலர் 20 மில்லியன்

**மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி:** கடன் பெறுகைகளைப் பெற்ற திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும

**கடன் பெறுவதற்கான செலவு:** கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான பிரயோகிக்கத்தக்க வட்டி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளும் இரண்டாந்தரச் சந்தையில் தற்போதைய இலங்கையின் நாட்டுக்கான பன்னாட்டு முறி வீதம் + 200 அடிப்படைப்புள்ளிகளை விஞ்சுதலாகாது

## கடன் பெறக்கூடிய நோக்கங்கள் எவை?

தொழிற்படு மூலதனம், வியாபாரத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு, கம்பனியை மீள அமைத்தல் அல்லது ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பனவு செய்தல்

மத்திய வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் விபரங்கள் மற்றும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரத்தினை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான www.cbsl.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து 011-2477358 அல்லது 011-2477000 – நீட்டம் 3126.

பி. எச். ஓ. சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


# சாய்பாபா அறக்கட்டளையை கையகப்படுத்த ஆந்திர அரசு திட்டம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா உடல்நிலை பாதிக்கப்பட்டு தற்போது புட்டபர்த்தி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவரது உண்மையான பெயர் சத்ய நாராயண ராஜு. மிகச் சிறிய வயதிலேயே இவர் சித்தாடல் செய்து தான் ஒரு அவதாரம் என்பதை உணர்த்தினார்.

சீரடி சாய் பாபா முக்தி அடையும் போது மீண்டும் 8 ஆண்டுகள் கழித்து சென்னை மாகாண பகுதியில் மறுபிறப்பு எடுப்பேன் என்றார்.

அவர் சொன்னது போலவே 8 ஆண்டுகள் கழித்து சென்னை மாகாண பகுதியில் புட்டபர்த்தியில் சாய்பாபா பிறந்தார். எனவே சீரடி சாய் பாபாவின் மறு அவதாரமாக புட்டபர்த்தி சாய்பாபா கருதப்படுகிறார். 1940 ஆம் ஆண்டு தான் ஒரு அவதாரம் என்று இந்த உலகுக்கு அறிவித்தார். அதன் பின்னர் அவர் செய்த அற்புதங்கள் சித்தாடல்கள் ஏராளம். இதனால் அவரது தெய்வீக ஆற்றல் பற்றிய புகழ் இந்தியாவில் மட்டுமன்றி, உலகம் முழுவதும் பரவியது. மேலை நாட்டு பக்தர்கள் அவருக்கு பல நூறு கோடி ரூபாயை வாரி வழங்கினார்கள்.

ஐரோப்பியர் ஒருவர் சாய் பாபா அறக்கட்டளைக்கு ரூ. 300 கோடி கொடுத்தார். உலகம் முழுவதிலும் இருந்து நிதி திரண்டதால் கடந்த 20 ஆண்டுகளாக அவர் ஏராளமான சமூக சேவை பணிகளில் ஈடுபட்டுள்ளார். புட்டபர்த்தியில் பல நூறு கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்திலான மருத்துவ மனையை கட்டியுள்ளார்.

இங்கு ஏழை எளியவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. சென்னை மக்களின் தாகம் தீர்க்க தெலுங்கு –கங்கை கிருஷ்ணா நதி நீர் திட்டத்துக்கு சாய் பாபா அறக்கட்டளைக்கு செய்த உதவி குறிப்பிடத்தக்கது.

சாய்பாபாவின் அறக்கட்டளைக்கு தற்போது 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது. இந்த அறக்கட்டளை முறையாக நிர்வகிக்கப்படுகிறதா? என்பது பற்றி ஆய்வு செய்ய ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி நேற்று முன்தினம் 5 பேர் குழுவை புட்டபர்த்திக்கு அனுப்பி வைத்தார்.

ஆந்திர தலைமை செயலாளர் தலைமையில் அந்த ஐவர் குழு புட்டபர்த்தி சென்றது. இதையடுத்து சாய்பாபா அறக்கட்டளையை ஆந்திர மாநில அரசு கையகப்படுத்த பரிசீலனை செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ)

# ஜப்பானில் இருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கு இந்தியா தடை

(புதுடில்லி)

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அணுமின் உலையில் இருந்து கதிர்வீச்சு ஜப்பானின் மற்றப் பகுதிகளுக்கும் பரவலாம் என்ற அச்சத்தால் ஜப்பானில் இருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதிக்கு இந்தியா 3 மாத தடைவிதித்துள்ளது.

நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மத்திய ஜப்பானில் புகுஷிமா அணுமின் நிலையத்தை பாதுகாக்க 4 வாரமாக நடந்த முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இந்தியா இந்தத் தடையை விதித்துள்ளது.

ஜப்பானில் இருந்து உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்ய தற்காலிகமாக தடை விதிக்கப்படுகிறது. 3 மாத காலம் இந்தத் தடை அமுலில் இருக்கும். உடனடியாக இது அமுலுக்கு வருகிறது என சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்வீச்சு ஜப்பானின் இதர பகுதிகளிலும் பரவலாக பரவி வருகிறது. இதனால் அந்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களிலும் அது பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால் விரிவான விவாதங்களுக்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து பழங்கள் காய்கறிகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை சிறிய அளவில் இந்தியா இறக்குமதி செய்து வருகிறது. அணு மின்நிலையத்துக்கு அருகில் உள்ள பகுதிகளில் இருந்து பால் பொருட்கள், மீன், இறைச்சிப் பொருட்களை இறக்குமதி செய்ய பல்வேறு நாடுகள் தடை விதித்துள்ளன. பல நாடுகள் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் கதிர்வீச்சின் அளவைக் கண்காணித்து வருகின்றன. (ஸ்ரீ)

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம்; அனில் அம்பானியிடம் விசாரணை

2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர் அனில் அம்பானியிடம் நாடாளுமன்ற பொது கணக்குக் குழு நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது.

சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக இந்த விசாரணை நடந்தது. 2 ஜி ஒதுக்கீடு மற்றும் 3ஜி அலைக்கற்றை ஏலம் தொடர்பாக அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இதுகுறித்து பொது கணக்குக் குழு உறுப்பினர் ஒருவர் கூறியதாவது,

பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் அனில் அம்பானி பதில் அளித்தார் என்றார்.


2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் சிபிஐ குற்றப் பத்திரிகையில் இடம்பெற்றிருப்பதால் இது குறித்து விரிவாகப் பேச முடியாது என்றும் பேசினால் அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகிவிடும் என்றும் குழுவினரிடம் அம்பானி தெரிவித்தார். (ஸ்ரீ)

# இந்திய எல்லைக்குள் நுழைந்த 14 பாகிஸ்தானியர்கள் கைது

(சென்னை)

இந்தியக் கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாக பாகிஸ்தான் நாட்டவர் 14 பேர் கைது செய்யப்பட்டதாகக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்ட கடலோரப் பகுதியான ஜக்காவு அருகே இந்த 14 பேர் சட்டவிரோதமாக நுழைந்ததாகவும் அவர்களைக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் கைது செய்ததாகவும் அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)


யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.கனகரத்தினம் அவர்களின் உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா மங்கல விளக்கேற்றுவதையும் உருவச்சிலையை இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியை திருமதி இ.கனகரத்தினம் திரை நீக்கம் செய்து வைப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:அ.சாள்ஸ்)

## யோகாசனமும் தளர்வு பயிற்சி வகுப்பும்

(யாழ்ப்பாணம்)

உடல், உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் தளர்வு பயிற்சி வகுப்பும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.15 மணி முதல் 7.15 மணிவரை யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் வயது வேறுபாடு இன்றி இருபாலாரும் கலந்துகொள்ளலாம். நோயாளர்களுக்கு விசேட கவனிப்பு இடம் பெறுமென பயிற்சி ஆசிரியர் ந.கோணேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வகுப்புகள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். (ஸ்ரீ-3)

## ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கணித பாடத்திற்கு சதுரக் கோட்டு கொப்பியை பயன்படுத்த வேண்டும்

### வடமாகாண ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் தரம் 1,2 இல் கல்விகற்கும் மாணவர்கள் கணித பாடத்திற்கு சதுரக்கோட்டு அப்பியாசக் கொப்பியும் ஏனைய பாடங்களுக்கு இரட்டை றூள் கொப்பியும் பாவித்தல் வேண்டும் என வடமாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.ராஜேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் இரண்டாம் தவணையிலிருந்து அதிபர்கள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## பொதுக்கூட்டம்

கிராமிய வலுப்படுத்தலுக்கான அமைப்புகளின் இணைய உடுவில் பிரதேச வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் இணுவில் கலாசோதி சனசமூக நிலைய தலைவர் மா.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக காவிரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை யோசுவா அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதிக்கு விளக்கமறியல்

வடமராட்சி வல்லிபுரக் கோயில் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வயோதிபரை கன்ரர் வாக்னம் மோதிய விபத்துடன் தொடர்புடைய சாரதியை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வல்லிபுரக் கோயிலுக்குச் சென்றுவிட்டு வரணிக்குத் திரும்பிக் கொண்டிருந்த வயோதிபரை மணற்காட்டுப் பகுதிக்கு மண் ஏற்றிச் சென்ற கன்ரர் வாகனம் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் மோதிவிட்டுத் தப்பிச் சென்ற கன்ரர் வாகன சாரதியை பருத்தித் துறை பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மணற்காட்டு மண் ஏற்றும் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

மேற்படி சாரதியை நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்ப் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சாரதியை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி


(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு விழாவில் வடமராட்சிக்குட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 10 ஓவர் - 9பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர் வரும் சனி,ஞாயிறு தினங்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் பி பிரிவில் அங்கம் வகிக்கும் 16 அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-24)

## நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சார்ந்த மண்டப நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் 11 ஆம் திகதி வரை 3 தினங்கள் காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. கலை நிகழ்ச்சிகள் யாவும் மாலை நேரத்தில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3)




## சுழற்சி முறையிலான சிரமதானப் பணிகள்

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அல்வாயிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக இன்று வியாழக்கிழமை தொடக்கம் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரமதானத்தில் ஈடுபடும் சமூக பற்றுள்ளவர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசில்களும் சமைக்காத உணவுப் பொருட்களும் வழங்கப் படவுள்ளன.

குறிப்பாக அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள ஒழுங்கைகளில் சிலர் மண் அகழ்ந்து குப்பைகளைக் கொட்டுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

இதை நிவர்த்தி செய்யவே அல்வாயிலுள்ள சனசமூக நிலையங்கள், மாதர் குழுக்கள் இன்று தொடக்கம் சுழற்சி முறையிலான சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளன. (ஸ்ரீ-3-51)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கவிதை, சிறுகதைப் போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்ட மகளிர் தின கவிதைப் போட்டி மற்றும் சிறுகதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் பெயர் விபரம் வருமாறு,

**கவிதைப் போட்டி**

திருமதி றொசற் தவநாயகம் (சிற்றம்பலபுரம், அச்சுவேலி), மேரி கியூரி ஜோன் பீற்றர் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), டிஷாணி கிறிஸ்தோபர் (மத்திய கிழக்கு வீதி, குருநகர்)

10 பேர் ஆறுதல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**சிறுகதைப் போட்டி**

அ.விஸ்ணுவர்த்தி (மலையன் தோட்டம், கரணவாய் மேற்கு, வல்வெட்டித்துறை), யேசுராஜா டொறற்ரா (பெரியவிளான், இளவாலை), எஸ்.என்.ஜே.மரியாம்பிள்ளை (கடற்கரை வீதி, குருநகர்)

3 பேர் ஆறுதல் பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-51)

## பாடசாலை மட்ட சிறுவர் சித்திரப் போட்டிகள்

பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் சிறுவர் சித்திரப் போட்டிக்கு மாணவர்களுக்குச் சுட்டெண் வழங்கப்பட வேண்டுமெனவும் நடுவர்களாக அப்பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் தவிர்ந்த ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

அத்தோடு முறைப்படி நடுவர்களுக்கான படிவங்கள் தயாரிக்கப்பட்டு புள்ளியிடப்பட்டு நடுவர்களின் ஒப்பத்துடன் தெரிவு செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவு செய்யப்பட்டதற்கான படிவங்கள் அறிக்கைப்படுத்தப்பட வேண்டுமெனவும் மேலும் கலந்துகொள்ளும் சிறுவர்கள் அனைவரதும் சித்திரங்களும் பேணப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோலவே வேறு சிறுவர்களுக்கான ஏனைய போட்டிகளுக்கும் நடுவர்களின் அறிக்கைப்படியே மாணவர்கள் தெரிவுப் பட்டியல் இடம்பெற்றது என்பதை அதிபர்கள் உறுதிப்படுத்திய பின்பு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் சித்திரப் போட்டி முடிவுகளை அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## வாழ்க்கைத்திறன் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சுகவாழ்வுக்கான பயணம் அமைப்பினால் பாடசாலை சுகாதாரத் தொண்டர் கழக உறுப்பினர்களுக்கான இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் அதனோடிணைந்த எச்.ஐ.வி./எயிட்ஸ் போன்ற பிரச்சினைகளுக்கான வாழ்க்கைத் திறன் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் வாழ்க்கைத்திறன், ஆரோக்கியம், அனர்த்தம், இனப்பெருக்கம் ஆகிய விடயங்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளன.

வளவாளர்களாக கோப்பாய் ஆதார வைத்தியசாலை வைத்தியகலாநிதி வி.நாகநாதன், யாழ்ப்பாண தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் ஜி.நக்கீரன், யாழ்ப்பாண மார்பு நோய் சிகிச்சை நிலைய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏ.எஸ்.சிவபாலன், கோண்டாவில் பொதுச்சுகாதார பரிசோதகர் என்.பிறேம்குமார், வட்டுக்கோட்டை மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஜி.சேரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ளலும் தீர்வு காணலும், ஆரோக்கியமான எதிர்கால சமூகத்தினைக் கட்டியெழுப்புதல், சமூகப் பிணக்குகளைத் தீர்ப்பதில் மாணவர்களின் பங்குபற்றுதலை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்காகக்கொண்டு இப்பயிற்சிப் பட்டறை நடாத்தப்படுகிறது. பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3)

## சன் சீ கப்பலில் சென்ற அகதிகளில் மற்றொருவர் தொடர்பாக விசாரணை

சன் சீ கப்பல் மூலம் கடனாவுக்கு சென்ற இலங்கை அகதிகளில் மற்றுமொருவர் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் தொடர்பில் குடிவரவு மற்றும் அகதிகள் சபை விசாரணைகளை மேற்கொண்டது. இவர் தமிழீழ விடுதலை புலிகளுடன் இணைந்து யுத்தத்தில் பங்கேற்பதை தவிர்ப்பதற்காகவே அவர்களின் கட்டடம் ஒன்றில் களஞ்சிய காப்பாளராக பணியாற்றினார் என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் தமிழீழ விடுதலை புலிகள் தம்மை இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதற்காக இவர் சுமார் ஆறு மாதங்களாக காட்டில் ஒளிந்திருந்ததாகவும் கனேடியன் குடிவரவு அகதிகள் சபையிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த சாட்சியத்தை அடுத்து இலங்கையில் உள்ள அவரது பெற்றோரும் தொலைபேசி மூலம் கனடாவின் குடிவரவு அகதிகள் சபையிடம் தமது மகனின் கருத்து உண்மை என தெரிவித்ததாக கனடாவின் நஷனல் டெயிலி நியூஸ் தெரிவித்துள்ளது.

சன் சீ கப்பல் கனடாவுக்குள் பிரவேசித்தது முதல் தற்போது புலிகள் என சந்தேகிக்கப்படும் ஐந்தாமவர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். ஏற்கனவே தமிழீழ விடுதலை புலிகளின் உறுப்பினர் என சந்தேகிக்கப்பட்டு 40 பேரை கனேடிய குடிவரவு அகதிகள் சபை இலங்கைக்குதிருப்பி அனுப்ப தீர்மானித்துள்ளது.

எனினும் அவர் களுக்கிடையில் நடத்தப்படும் விசாரணைகளில் நாடு கடத்தப்படவிருந்த ஒருவர் உண்மையான அகதி என அடையாளம் காணப்பட்டார். மற்றுமொருவருக்கு எதிரான நாடு கடத்தும் உத்தரவு தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சாய்பாபா நலம் பெற உலகெங்கும் பிரார்த்தனை

(புட்டபர்த்தி)

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வரும் ஸ்ரீசத்ய சாய்பாபா விரைவில் குணமடைய உலகமெ ங்கும் உள்ள அவரது பக்தர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து சாய்பாபா கடந்த 4ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உயிர்காக்கும் கருவிகளின் உதவியுடன் பாபாவுக்கு சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பாபாவின் உடல்நிலை குறித்த தகவல் பரவியதும் உலகமெங்கிலும் இருந்து அவரது பக்தர்கள் புட்டபர்த்தியில் குவியத் தொடங்கினர்.

அவர் விரைவில் பூரண நலம் பெற உலகமெங்கிலும் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.


### தீவிர சிகிச்சை

பாபாவின் உடலில் முக்கிய உறுப்புக்கள் சீராகச் செயற்பட்டு வருவதாகவும் அவரது நினைவுத் திறனில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவருக்கு சிகிச்சையளித்துவரும் சத்யசாய் உயர் மருத்துவ அறிவியல் நிறுவன மருத்துவமனை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

எனினும் தொடர்ந்து உயிர் காக்கும் கருவிகளின் உதவியுடனேயே அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மெதுவான டயாலிசிஸ் செய்யப்படுகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாலையிலும் இதுபோன்ற அறிக்கையை மருத்துவமனை இயக்குநர் வெளியிட்டார். சாய்பாபா உடலில் முக்கிய உறுப்புக்களின் செயற்பாட்டில் திருப்தியளிக்கும் வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாபாவின் உடல் நிலை குறித்து கேள்விப்பட்ட அவரது பக்தர்கள் புட்டபர்த்தியில் குவிந்து வருகின்றனர். இதையடுத்து அசம்பாவிதங்கள் ஏதும்நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அங்கு 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது.

சாய்பாபா அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைக்கு அருகே மக்கள் கூடுவதற்குத் தடை விதிக்



கப்பட்டிருக்கிறது. .

சிகிச்சைக்குத் தேவையான அனைத்து வகையான ஒத்துழைப்பையும் மாநில அரசு வழங்கும் என்றும் இதற்காக ஆந்திர சுகாதாரத்துறைச் செயலர் பி.வி.ரமேஷ் மருத்துவமனைக்கு விரைந்துள்ளதாகவும் மாநில வருவாய்த்துறை அமைச்சர் ரகுவீர ரெட்டி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**மீசாலை வீரசிங்கம் ம.வி**

அ.கீர்த்திகா(8ஏபி), பு.ஜென்சி (8ஏபி), க.புஸ்பவேணி(6ஏ2பிசி), பா.தர்சனா(6ஏ2பிசி), ம.கார்த்தீபன் (6ஏபி2சி), த.அருட்கரன்(5ஏ2பிசி), க.இதயந்தன்(5ஏ2பிசி), த.கஜந்தினி (4ஏ 2பி3சி), பா.மதுரியன் (4ஏ2பி 2சிஎஸ்), செ.கீர்த்தனா(4ஏ5சி), த.மதுரா (3ஏ5பிசி), இ.கோபிகா (3ஏ 2பி3சி எஸ்), யோ.கார்த்திகா (3ஏபி4சி எஸ்), ல.சதுர்சன் (3ஏபி5சி), அ.கிருபரூபன்(3ஏபி4சிஎஸ்). (ஸ்ரீ-2-29)

## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 07.04.2011 தொடக்கம் 20.04.2011 பி.ப 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 20.04.2011 பி.ப 4.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 21.04.2011 மு.ப. 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வியாற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'செயலாளர் நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலா சத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக் கூடிய தாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் ( VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01. | கொக்குவில் 2ஆம் ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 6100.00 | 500.00 | M09/C10 |
| 02. | சபை விடுதி ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 2150.00 | 500.00 | M10/C10 |
| 03. | பொற்பதி பிள்ளையார் ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 4750.00 | 500.00 | M10/C10 |
| 04. | பரமேஸ்வரா வீதி குறுக்கு ஒழுங்கைகள் கல்லிட்டுத்தாரிடல் | 3000.00 | 500.00 | M10/C10 |
| 05. | மாரியம்மன் குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 3750.00 | 500.00 | M10/C10 |
| 06. | கொக்குவில் சம்பியன் | 1200.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

திரு மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி-2885)

## பால் மா விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது

### அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

உலக சந்தையில் பால் மா விலை அதிகரித்துள்ள போதிலும் நாட்டில் பால்மா விலை அதிகரிக்கப்படமாட்டாது என வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் பால்மாவின் விலை 4 ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்து உள்ளபோதிலும் உள்ளூரில் பால் மாவின் விலையினை ஐம்பது சதத்தாலேனும் அதிகரிப்பதற்கு தாம் இடமளிக்கப் போவதில்லை என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

ஒருகிலோ பால்மாவின் விலையை 50 ரூபா வரையிலும் 400 கிராம் பால்மாவின் விலையை 20-35 ரூபாவால் அதிகரிப்பதற்கு உள்ளூர் பால் மா கம்பனிகள் விடுத்திருந்த கோரிக்கையினை நிராகரித்ததாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

விளம்பர நடவடிக்கைகளுக்காக பாரிய செலவினை அவர்கள் மேற்கொள்வதனால் அதன் மூலம் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை

### நல்லூர் பிரதேசசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவோருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப் படும் என நல்லூர் பிரதேசசபைச் செயலர் எம். சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீதி யோரங்களில் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை விபத்துக்கள் ஏற்படும் வகையில் நிறுத்துவதைத் தவிர்த்து அவற்றுக்குரிய தரிப்பிடங்களில் நிறுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வீதிக்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகனங்கள் சபையால் அகற்றப்படுமானால் அதற்குத் தண்டப் பணம் அறவிடப்படும் என்று தெரிவித்தார்.

இதேவேளை இவ்வறிவித்தல் தொடர்பாகத் துண்டுப் பிரசுரங்களும் திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே வீதி விபத்து ஏற்படாத வகையிலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வண்ணமும் வாகனங்களை தரிப்பிடங்களில் நிறுத்தி ஒத்துழைக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினெட்டாவது வருடாந்த மாநாடு

## இரண்டாம், மூன்றாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு யாழ். பல்கலைக் கழக கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமானது. இம்மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வுகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

இதில் "பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவி ருத்தி" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கை பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து வைப்பார். இக்கருத்தரங்கில் நான்கு துறைசார் நிபுணர்கள் உரை யாற்றுவர்.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணன் பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் சமூக வலுவூட்டலின் பங்களிப்பு பற்றியும் மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் சிறிதரன் "பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் நிதித்துறையின் பங்களிப்பு" பற்றியும் உலக சுகாதார நிறுவனத்தின யாழ். பிராந்திய வைத்திய நிபுணர் சிவராஜா "பிராந்தியத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் கல்வித்துறையின் பங்களிப்பு" பற்றியும் கலந்துரையாடுவர்.

இப்பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான முக்கிய நிகழ்வில் யாவரும் கலந்து உங்கள் கருத்துக்களைப் பரிமாறி உங்கள் ஐயப்பாடுகளையும் நீக்கிப் பயன்பெறுமாறு சங்கம் அழைப்பு விடுக்கின்றது.

இரண்டாம் நிகழ்வில் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படும். இவ்வருடம் வெளியீடாக 27 ஆய்வுக்கட்டுரைகள் நிபுணர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தூய விஞ்ஞான பிரிவில் 10 கட்டுரைகளும்,. பிரயோக விஞ்ஞான பிரிவில் 9 கட்டுரைகளும், மருத்துவ விஞ்ஞான பிரிவில் 2 கட்டுரைகளும், சமூக விஞ்ஞான பிரிவில் 6 கட்டுரைகளும் அடங்கும். யாழ். பல்கலைக் கழக பௌதிகவியல்துறை விரிவுரை கருத்தரங்கு மண்டபங்களிலும், நூலகக் கேட்போர் கூடத்திலும் வாசிப்புகள் இடம்பெறும்.

தூய விஞ்ஞான பிரிவுக் கட்டுரைகள் பௌதிகவியல் துறையின் கருத்தரங்கு மண்டபத்தில் இணைப்பேராசிரியர் விக்கினேஸ்வரன், திருமதி நிர்மலா ரவிமன்னன் தலைமைகளில் நடைபெறும். பிரயோக விஞ்ஞான, மருத்துவப் பிரிவுக் கட்ரைகள் நூலகக் கேட்போர் கூடத்தில் கலாநிதி திருமதி நளினா ஞான வேல்ராஜாவும், கலாநிதி மகேசனினதும் தலைமையிலும் நடைபெறும். சமூக விஞ்ஞானக் கட்டுரைகள் பௌதிகவியல் துறை விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் வேல்நம்பி தலைமையில் இடம்பெறும்.

மூன்றாம் நாள் அமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இறுதி நாள் செயலமர்வில் இணைப்பேராசிரியர் இராஜேஸ்வரன் தலைமையில் காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். சமூக விஞ்ஞான பிரிவுத் தலைவர் உதயகுமார் யாழ்ப்பாண மாவட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து "உள்ளூராட்சி அதிகாரத்திற்குட்பட்ட பகுதியின் நிலைத்திருக்கும் அபிவிருத்தி" யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உரை நிகழ்த்துவார்.

அன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவின் தலைவர் பேராசிரியர் கு.மிகுந்தன் விவசாயத்தில் காலநிலைமாற்றம்: சவால்களும் அவற்றை எதிர்கொள்வதும் எனும் தலைப்பில் தலைமைப் பேருரையாற்றுவார்.

பாடசாலை விஞ்ஞான நிகழ்வின் கீழ் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் தலைமைப் பேருரையைத் தொடர்ந்து இடம்பெறும்.

இம் மூன்று நாள் நிகழ்வுகளிலும் சங்க அங்கத்தினரோடு, ஆர்வலர்களும், மாணவர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு விஞ்ஞான சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-2)

# இலங்கையில் இடம்பெற்று வரும் கடத்தல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை

## அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் கடத்தல்கள் தொடர்பில் பொலிஸாரோ அல்லது இலங்கையின் மனித உரிமை அமைப்புக்களோ நடவடிக்கைகளை எடுப்பதில்லை. இது மிகவும் வேதனையானது என பிரித்தானியாவை தளமாகக் கொண்ட அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,இலங்கை சட்டக்கல்லூரியில் கல்விகற்கும் மாணவன் எம். துசாரா ஜெயர்னா என்பவர் கடந்த மாதம் 4 ஆம் திகதி கடத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அச்சுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், இது தொடர்பில் அவர் மேற்கொண்ட முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி இலங்கை சட்டக்கல்லூரியில் நடைபெற்ற பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொண்டதால் துசாரா கடத்தப்பட்டிருந்தார்.

இந்த முறைகேடுகளில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவின் மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷாவும் தொடர்புபட்டிருந்தார்.

நாமல் தொடர்பில் கல்லூரி நிர்வாகத்தினரிடமும் அனைத்து அமைப்புக்களிடமும் துசாரா மேற்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் கடத்தலில் ஈடுபட்டவர்கள் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# யோகர் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் குருபூசை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவினை வைத்திய கலாநிதி சி. யமுனானந்தா மற்றும் சு.துரைராஜா ஆகியோர் ஆற்றுவார்கள். அத்துடன் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்கள் வழங்கும் நற்சிந்தனைப்பாடல்கள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-2)

# யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 84 வீதிகள் காப்பற் வீதிகளாக புனரமைக்கப்படும்

## யாழ். மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 84 வீதிகளுக்கு காப்பற்றிட திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகரசபை அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொண்டு வருகிறது. மக்களின் நலனைக் கருதிக் கொண்டு 84 வீதிகள் காப்பற் வீதிகளாக மாற்றப் படவுள்ளன.

அத்துடன் யாழ். மாநகரசபையின் கட்டடத் தொகுதியும் 600 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கு புதிய இயந்திர கொள்வனவுக்காக ஜனாதிபதி கடனுதவி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 120 கிலோ மீற்றர் நீளமான வீதியை புனரமைப்பு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# பூநகரி பிரதேசத்துக்கு துரிதகதியில் மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

பூநகரிப் பிரதேசத்திற்கு துரிதகதியில் மின்சார விநியோகத்தை செய்வதற்கான விரிவாக்கல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனடிப்படையில் பரந்தனில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதி வழியாக மின்னிணைப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டு மின்னிணைப்பு வயர்கள் பொருத்தப்படுகின்றன.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பூநகரிப் பிரதேசத்திற்கு உயர் அழுத்த மின்வழி இணைப்பு மூலமாக மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.


இப்போது மின் பிறப்பாக்கி மூலமாகவே பூநகரிப் பகுதிக்கான மின்சாரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சிறப்பு பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)


சிறுப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பூங்காவன உற்சவத்தில் சிறப்பு நிகழ்வாக யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் பண்டிதர் பொன் சுகந்தனின் தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றம் இன்று வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)





யா/குளமங்கால் றோ.க. வித்தியாலயத்திற்கு கொழும்பு றோயல் கல்லூரிக் குழுவினர் அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர். இந்நிகழ்வில் விருந்தினர்கள் உட்பட 51 ஆவது படைத் தளபதி எச்.ஜெ.வல்ஹம, தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் றோயல் கல்லூரி சமூகத்தினரால் வழங்கப்பட்ட கல்வி உபகரணங்களை 51 ஆவது படைத் தளபதி, உப-அதிபர் க.கணபதிப்பிள்ளை, பழைய மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் மாணவியிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



மூத்த எழுத்தாளர் தெணியானின் 'தவறிப்போனவன் கதை' நாவல் வெளியீட்டு விழா அல்வாயிலுள்ள கலையகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தலைமையுரை நிகழ்த்துவதையும் வரவேற்புரையினை நிர்வாக உத்தியோகத்தர் வே.சிவராஜலிங்கம் நிகழ்த்துவதையும் நூல் ஆசிரியர் தெணியான் ஏற்புரை ஆற்றுவதையும் இந்நூலினை அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் வெளியிட்டு வைக்க முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் க.சின்னராஜன் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# எங்கோ வாழிய குடுமி



வளமான நாட்டிற்கு ஆறு இன்றியமையாதது. நீரின்றேல் உலக இயக்கமில்லை. இதனை நெட்டிமையார் குடுமியின் வாழ்வியலோடு வைத்துப் பார்க்கிறார்.

அதிலும் ஒரு புதுமையைக் கையாண்டுள்ளார். பஃறுளியாற்றின் நீர்வளத்தை ஒப்பிடாமல் மணல் வளத்தையே எடுத்துக் கூறுகிறார். நடந்து செல்லும் ஆற்றங்கரை மணல் அன்றி ஆற்றின் அடியில் உள்ள மணல் தொகுதியைக் கணக்கிட்டுக் காட்டுகிறார்.

வானத்து மழை, நீர்வளத்தை, மன்னனை வாழ்த்தும்போது பயன்படுத்திய ஆலத்தூர் கிழாரின் கணக்கும் இங்கு ஒப்பிட்டு நோக்குதற்குரியது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை வாழ்த்தும்போது பின்வருமாறு பாடியுள்ளார்.

*"எங்கோன் வளவன் வாழ்க என்று நின்*
*பீடு கெழு நோன்தாள் பாடேனாயின்*
*படுபறி யவனே பல் கதிர் செல்வன்*
*யானோ தஞ்சம் பெரும இவ் உலகத்துச்*
*சான்றோர் செய்த நன்றுண்டாயின்*
*இமயந் தீண்டி இன்குரல் பயிற்றிக்*
*கொண்டால் மாமழை பொழிந்த*
*நுன் பல் துளியினும் வாழிய பலவே"*

(புறநானூறு:34)

'எங்கள் மன்னன் வாழ்க என்று உன்னுடைய வலிமையை நான் பாடவில்லையாயின் வாழ்நாளுக்கு அழகான பல கதிரையுடைய ஞாயிறு தோன்றமாட்டான். நான் மிகவும் எளியவன். இந்த உலகத்திலே சான்றோர் செய்த நல்வினை இருப்பின் இமயமலையில் திரண்ட ஓசைகளை எழுப்பிக் கீழ்காற்றால் வரும் பெரிய முகில் சொரிந்த நுண்ணிய பல துளிகளைக் காட்டிலும் நீ பலகாலம் வாழ்வாயாக.' மழைத்துளியின் எண்ணிக்கையைப் புலவர் வாழ்நாளின் நீண்ட காலத்தைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார்.

இயற்கை நிலையில் விசும்பிலிருந்து வீழும் துளிகளைக் கணக்கிடுவது எளிதன்று. ஆனால் ஆலத்தூர் கிழார் அதனையே தனது காலக் கணிப்பிற்குப் பயன்படுத்தியுள்ளார். நெடிமையாரைப்போலவே ஒரு புதிய கணக்கீட்டுமுறையைக் கையாண்டாலும் எல்லையற்ற தன்மையை விளக்கிக் காட்டுவதில் நீர்த்துளியைவிட மணல் துளிகள் மேம்பட்டது.

புலவர்களின் காலத்தில், காலத்தைக் கணிப்பிட இயற்கையே உதவியது. ஒருவன் வாழ்நாளில், நாளின் கடப்பை ஞாயிறும் திங்களும் தான் உணர்த்தின. எனவே அதனையே பயன்படுத்தினர்.

ஆனால் நெடிமையார் தன் புலமைத்திறனால் கணிப்பீட்டில் நிலத்தையும் இணைத்துவிட்டார். வாழ்த்துப்பாடும்போது தன் முழுமையான ஆர்வத்தையும் வெளிப்படுத்த அவர் எடுத்துக் கொண்ட அளவு புதுமையானது. ஆற்றுமணலின் அளவை ஒவ்வொன்றாக எண்ணிப்பார்க்கத் தூண்டும் புலவருடைய எண்ணத்தை இன்று நாம் வியந்திருக்க முடியாது. புலவர் உள்ளத்தில் மன்னன் மேலிருந்த மதிப்பு பாடலில் நன்கு வெளிப்பட்டுள்ளது.

மன்னனை வாழ்த்தும்போது அவனுக்கிருந்த தகுதிப்பாட்டை அவர் எடுத்துக் காட்டிய முறைமை மிகச் சிறப்பானது. போரும் வாழ்வும் என்ற நிலை ஏற்படும் போது வாழ்வுக்கு அவர் கொடுக்கும் மதிப்பு மேலானது. பகைமையால் போர் மூண்டாலும் மக்கள் வாழ்வைப் பற்றியும் மன்னன் எண்ணிச் செயலாற்ற வேண்டும். போரின் அழிவைப்பற்றி மன்னன் எண்ணிப்பார்த்து அதனைத் தடுக்க ஏற்றமுயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். போரில் பயன்படுத்தும் ஆயு தங்களின் வேகம் கட்டுக்கடங்காமல் போகலாம்.

விரைவுபடுத்திப் போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் நிலை ஏற்படலாம். எனவே போரைத் தொடங்கும் முன்னரேயேஏற்றபாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இது போர் நடக்கும் வேளையில் கடைப்பிடிக்கப் படவேண்டிய அறம். இந்த அறத்தை அன்று மன்னர் கடைப்பிடித்ததைப் புலவர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மக்களில் யாருக்கு முதலில் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதைப் புலவர் வரையறை செய்வது புலவரின் சமூகம் பற்றிய உணர்வை நன்கு விளக்குகிறது. ஒரு நாட்டில் சமூக அங்கத்தவர்களாக விளங்கும் மக்களைப் பாதுகாக்கும் பணியை மன்னர் மேற்கொண்டால் மக்கள் அழிவைத்தடுக்கலாம். இதனை அன்றே எடுத்துக் கூறிய நெட்டிமையார் தன் புலமையாற்றலை பரிசு பெறுவதற்காகப் பயன்படுத்தவில்லை.

நாட்டின் நலம் பற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கும் பயன்படுத்தியுள்ளார். புறநானூற்றுப் பாடல்கள் அரசரின் புகழ்பாடும் பாடல்கள் எனப் பலர் கருதுகின்றனர். ஆனால் அப் பாடல்களில் நாட்டு நலனும் மக்களின் வாழ்வியலும் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் நாம் நன்கு படித்தறிய வேண்டும்.

பாடல்களில் பொதியப்பட்டுள்ள செய்திகள் புலவரின் தமிழ்மொழியாற்றலையும் வெளிப்படுத்துகின்றன. பழந்தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டை இன்று நாம் அறிவதற்கும் இப்பாடல்கள் துணைசெய்கின்றன.

தமிழ்மொழியில் உள்ள சொற்களை அது சுட்டும் பொருளை இன்று தெளிவாக உணர இத்தகைய பாடல்களை மீளக்கற்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. பிறமொழிக் கலப்பினால் தமிழ்மொழியின் தூய்மை சிதைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று வழக்கிலில்லாத பழைய சொற்களை விளக்குவதற்குப் பிறமொழிச்

**கலாநிதி**
**மனோன்மணி சண்முகதாஸ்**

சொற்களைப் பயன்படுத்துகின்ற நிலை உருவாகி வேகமாக வளர்ந்து வருகிறது.


சங்கப் புலவர் மக்களைப் பாது காத்த முறையைச் சொன்னார்கள். ஆனால் நாம் தற்போது மொழிபேணலைப் பற்றி எண்ணிச் செயற்பட வேண்டிய நிலையிலுள்ளோம். தமிழ் மொழியின் ஆற்றல் இன்று உணரப்படாத நிலையில் பிறமொழிச் செல்வாக்கும் வலுவடைந்து வருகிறது.

இந்தநிலையை மாற்றுவதற்குப் புதிய புறநானூற்றுப் புலமையாளர்கள் தேவை. இன்றைய தலைமுறையினர்க்கு இலக்கியக் கல்வியை ஊட்டித் தமிழ்மொழி வல்லுநராக ஆகவேண்டும். சொற்குற்றம், பொருட்குற்றம் இன்றித் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை வளர்க்கவேண்டும்.

பழையபாடலுக்கு உரைவகுத்தோர் சிலர் தமிழ்ச் சொற்களின் பொருளை வட சொல்லால் விளக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக முன்னர் குறிப்பிட்ட பாடலில் உள்ள 'விசும்பு' என்னும் சொல்லுக்கு 'ஆகாயம்' எனப் பொருள் எழுதியுள்ளனர். 'நுவலும்' என்ற சொல்லுக்கு 'சொல்லுதல்' எனப் பொருள் கூறியுள்ளனர்.

ஆனால் தமிழ்மொழியின் வளமறிந்த சங்கப் புலவர்கள் ஏற்ற இடத்தில் ஏற்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நாங்கள் நன்குணரவேண்டும். அறைதல், இயம்புதல், உரைத்தல், கூறுதல், விளக்கல், செப்புதல், சொல்லுதல், நவில்தல், பகர்தல், மொழிதல், கழறுதல், ஏசுதல், பேசுதல் எனப் பல்வேறு நிலைப்பட்ட தொடர்பாடலைக் குறிக்கும் சொற்கள் சங்கப்பாடல்களில் உள்ளன. அவற்றைத் தொகுத்து அவற்றுக்குரிய விளக்கத்தையும் இன்று எல்லோரும் அறியும் வகை செய்யவேண்டும்.

தமிழ்மொழி காலங்கடந்த செம்மொழியாக நிலைத்து நிற்பதற்கு அம்மொழி பழமையான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது ஒரு காரணமாகும். எனவே பழந்தமிழ் இலக்கியம் பற்றிய அறிவை இன்றைய சமூகத்தவரிடையே ஊட்டவேண்டிய கடப்பாடு எமக்குண்டு. அன்று நெட்டிமையார் குறிப்பிட்ட அறநெறிபோல இதனையும் நாம் பேணவேண்டும். பழைய புறநானூற்றுப்பாடலை புதிய விளக்கங்களுடன் கற்க ஆவன செய்யவேண்டும். தமிழ்மொழியின் சிதைவைத் திட்டமிடுவோரை வெல்வதற்கு இதுவே சிறந்தவழி. மொழியின் சிறப்பைப் பேணும் களப்போரில் இது முதற்போராக அமையலாம். நெட்டிமையாரின் தமிழ்ப்பணி மேலும் தொடரவேண்டும். பழமையின் சிறப்பைப் புதுமையின் கோலத்தோடு வெளிக்கொணரவேண்டும். இம் முயற்சியில் ஈடுபடும் அனைவரையும் ஒன்றிணைக்க ஒரு வழி சொன்னவரே நெட்டிமையார். அவர் வாழ்த்து எக்காலத்திற்கும் ஏற்ற சிறப்பான வாழ்த்து என்பதில் ஐயமில்லை. தமிழ்மொழிக் காவலர் அனைவரையும் வாழ்த்தும் நல்வாழ்த்தும் இதுவேயாகும். (முற்றும்)





மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால் கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் வொ. பொன்னம் பலம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வடமராட்சி கல்விவலய முறைசாராக் கல்விப்பிரிவின் ஆசிரிய ஆலோசகர் த.மரியநாயகம், மணற்காடு பங்குத் தந்தை லெஸ்லி அன்ரனி அடிகளார், மணற்காடு கிராம சேவையாளர் செ. தோமஸ் யூட் ஆகியோர் நிற்பதனையும் சிறுவர் நாடகப் போட்டியில் பரிசில் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையிலுள்ள சமாதான நீதிவான்களில் 40000க்கும் குறைவானோரே தகுதியுடையவர்கள்

## சமாதான நீதிவான்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பு தெரிவிப்பு

இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சமாதான நீதிவான்கள் இருக்கின்றபோதிலும் 40 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே தகுதியுடையவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் உள்ளார்கள் என்று சமாதான நீதி வான்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய சமாதான நீதிவான்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி டி.எஸ்.களுபோவில தெரிவிக்கையில், இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சமாதான நீதிவான்கள் இருக்கின்றபோதிலும் 40 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே தகுதியுடையவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் உள்ளார்கள்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. எனவே, பாதிக்கப்பட்டவர்கள் உயர் நீதிமன்றத்திலோ ஐ.நா. ஊடான சர்வதேச நீதிமன்றங்களிலோ முறைப்பாடுகளைச் செய்யமுடியும். வடக்குக் கிழக்கில் யுத்தத்தின் பின்னர் நடைபெற்ற பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கவலை அடைகின்றோம்.

இலங்கையின் இறுதிக்கால யுத்தத்தின் பின்னர் வடக்குக்கிழக்கில் குறிப்பிட்டளவு மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்றன. ஆனால், தற்போது அவை குறைவடைந்துள்ளன. ஆட்கடத்தல், கப்பம் பெறல் போன்ற பாரிய அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் வடக்குக்கிழக்கில் மட்டுமல்லாது நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் நடைபெறுகின்றன.

எனவே, பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ தமது உரிமைகளுக்காக நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது அமைப்புக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக நாம் கூடிய கவனம் செலுத்துவோம்.

சமாதான நீதிவான்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பு 1993 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டிற்கு பின்னர் மனித உரிமைகள் தொடர்பாக கூடுதலான அவதான துடன் எமது அமைப்பு செயற்பட்டது. தற்போது 24 மாவட்டங்களில் 2 ஆயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புதுவருடத்தின் பின் பாண்விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

தமிழ் புதுவருடத்தின் பின்னர் மேலும் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது ,

எதிர்வரும் புதுவருடத்திற்கு பின்னர் அரசுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுக்களை தொடர்ந்து கோதுமை மாப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தமது உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளதாக அதன் செயலாளர் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இதனிடையே மரக்கறிகளின் விலைகளும் கடந்த ஒருவாரத்தில் 10விகித விலை அதிகரிப்பை கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுவருடத்தில் அதன் விலைகள் மே லும் அதிகரிக்கலாம் என தம்புள்ள பொருளாதார மையம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐரோ.ஒன்றியத்தின் போக்கை மாற்ற அரசாங்கம் கடும் முயற்சி

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் கொண்டுள்ள போக்கை மாற்றுவதற்கு அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு அங்கமாகவே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித் தானியாவுக்கு வந்துள்ளதாக பிரித்தானியாவில் உள்ள இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் பிரித்தானியாவின் வெளி விவகார அமைச்சர் வில்லியம் ஹெக் உட னான சந்திப்பை ஏற்படுத்த முடியாததால் அவர் தனது பயணத்தை தனிப்பட்ட பயணம் என தெரிவித்து வருகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனைக்குழு தனது அறிக்கையை எதிர்வரும் வாரம் வெளியிடவுள்ளதாக தகவல்கள் வெளி வந்துள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக அதனை மழுங்கடிக்கும் முயற்சிகளை பீரிஸ் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். இதனிடையே அமெரிக்காவு டனான உறவுகளை சீர் செய்ய உதவுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மாட்டின் லூதர் கிங்கிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நட்பை பெறுவதற்கு நாம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் அதனை மேற்கொள்ள நாம் தயாராகவுள்ளோம் என மஹிந்த மாட்டினிடம் தெரிவித்திருந்தார். (ஸ்ரீ-2)

# குடிசன வீட்டுத் தொகை மதிப்பீட்டுப் பணிகள்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் குடிசன வீட்டுத் தொகை மதிப்பீடுகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இம்மாத இறுதிவரை நடைபெற்று வருகின்றது.

இப்பிரதேச கிராம சேவையாளர்கள் தமது கிராமங்களில் மதிப்பீடு செய்து வீடுகளுக்கு முன் உள்ள கட்டடங்களில் வீட்டுக்கான இலக்கங்களைப் பொறித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)

# கிழக்கு மாகாணத்தில் காணியுறுதியற்ற 170 பேருக்கு காணியுறுதிப்பத்திரங்கள்

## ஜனாதிபதியினால் கையளிப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாவடி வேம்பு பகுதிகளில் காணி உறுதிப்பத்திரம் அற்ற நிலையில் உள்ள சுமார் 170 பேருக்கு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் வைத்து காணி உறுதிப் பத்திரங்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப் பட்டன.

கிழக்கு மாகாணத்தில் தங்களுக்குரிய காணியிருந்தும் அதற்குரிய உறுதிகள் அற்ற நிலையில் உள்ளவர் களுக்கு காணியுறுதி வழங்கும் செயற்பாட்டை மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டு வருகின்றார்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் காணியுறுதி அற்ற நிலையில் உள்ள அனைவருக்கும் இனபேதமின்றி உறுதியினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதுவரை சுமார் காணியுறுதியற்ற நிலையில் இருந்த் 600 பேருக்கு இந்த உறுதிப் பத்திரங்கள் பெற்றுக் கொடுத்துள்ளதாக தெரிவித்த பிரதியமைச்சர் இன்னும் 10 ஆயிரம் பேருக்கு காணி உறுதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அநுராதபுர மாவட்டத்தில் மரக்கறி பயிர்செய்கை திட்டமொன்று ஆரம்பம்

அநுராதபுர மாவட்டத்தில் மரக்கறி பயிர் செய்கைத் திட்டமொன்றை விவசாய சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவின் ஆலோசனைக்கு அமைய ஒவ்வொரு விவசாய மத்திய நிலையங்களில் இருந்தும் தலா 50 விவசாயிகளைத் தெரிவு செய்து இந்த திட்டத்தினை ஆரம்பித்துள்ளதாக விவசாயத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரவீந்திர ஹேவாவித்தாரண தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்காக அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து சுமார் இரண்டாயிரம் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தாம் விரும்பிய பயிரை தமது வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவதற்கான சந்தர்ப்பம் இவர்களுக்கு வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தில் பயிரிடப்படும் மரக்கறிகளை கம்பஹா மாவட்ட விவசாய மத்திய நிலையத்தினால் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# போர் முடிந்த இரண்டாண்டு காலத்தில் இலங்கையில் பெருமளவு முன்னேற்றம்

## அமைச்சர் பீரிஸ் லண்டனில் தெரிவிப்பு



இலங்கை போர் முடிந்த இரண்டாண்டு காலத்தில் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், அரசியல் சீர்திருத்தம் குறித்து பேச்சுவார்த்தைகளிலும் தமிழ்கட்சிகளுடன் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். கடந்த திங்களன்று லண்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோதல் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில்சமர்ப்பிக்கப்பட்டு விடும் என்று தெரிவித்தார்.

போர் முடிந்த இரண்டாண்டு காலம் என்பது மிகக் குறுகிய காலமே என்று கூறிய பீரிஸ் ஆனால், அந்த இரண்டாண்டுகளில் இந்த அளவுக்கு நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுத்திருக்கிறது என்றும் வடக்கே இயல்பு நிலை திரும்பியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஆனாலும் அமைச்சர் குறிப்பிட்ட இந்த மூன்று விடயங்களிலுமே அதாவது புனர்வாழ்வு நடவடிக்கைகள், அரசியல் சீர்திருத்தம் மற்றும் கடந்த கால நடவடிக்கைகளுக்கு பொறுப்பு சுமத்துதல் போன்றவைகளில் முன்னேற்றம் போதாது என்ற விமர்சனம் இருப்பதை சுட்டிக்காட்டிய போது, அதற்கு பதிலளித்த பீரிஸ், அதனை மறுத்ததுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் நல்லிணக்க நடவடிக்கைகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் இயல்பு நிலை திரும்பியிருப்பதாகக் கூறும் நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதில் என்ன தாமதம் என்று கேட்டதற்கு பதிலளித்த அவர், அவற்றில் படிப்படியாகத் தான் முன்னேற்றம் ஏற்படும் என்று பதிலளித்தார். (ஸ்ரீ-2)

## தெல்லியூர் துர்க்கையின் வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்தப் பொங்கல்விழா எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அதிகாலை 5.30 மணிக்கு உஷக்கால பூசையும் காலை 6மணிக்கு ஸ்நபன அபிஷேகம், வழுந்துப் பானை வைத்தலும் காலை 7 மணிக்கு காலைப் பூசை, கூட்டு வழிபாடும் காலை 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் கூட்டுவழிபாடும் காலை 11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் உள்வீதி உலாவும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு சாயரட்சை பூசையும் வசந்த மண்டபப் பூசையும் உள்வீதி, வெளிவீதி உலாவும் மாலை 6.30 மணிக்கு அர்த்தசாமப் பூசையும் இடம்பெறும்.

அத்துடன் வருடாந்த பொங்கல் விழாவை முன்னிட்டு பொங்கிப் படைக்கும் அடியார்கள் இராஜகோபுரத்தின் முன்றலில் அமைக்கப்பெற்றிருக்கும் தற்காலிக மண்டபத்தில் படையல்களைப் படைத்து நேர்த்தியைப் பூர்த்தி செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## திருகோணமலை வெருகல் பிரதேசத்தில்

# இந்து ஆலயத்துக்கு அருகில் தொல் பொருட்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் மலசல கூடத்திற்காக மண்ணெடுக்கப்பட்ட வேளையில் கிட்டத்தட்ட மூன்று, நான்கு அடிக்கு கீழ் பெரும் பரப்புக் கொண்ட களிமண்ணால் தயாரிக்கப்பட்டு சுடப்பட்ட மண் சட்டிகள் அடுக்காக இறுகிய தன்மையில் காணப்பட்டுள்ளது.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் இலங்கைத் துறைக் கிராமத்தில் அமைந்துள்ள செம்பகநாச்சியம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலேயே குறித்த தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இது முன்பு ஒரு கிணறுப் பகுதியாகவும் அமைந்திருக்கக் கூடியதாக இருந்துள்ளது. இச்செய்தி மக்களிடம் பரவியதால் அங்கிருந்த இராணுவத்தினர் இதனை அறிந்து தொல்பொருள் ஆய்வுப் பகுதிக்கு அறிவித்துள்ளனர்.

இதனால் பொலிஸ் பகுதியினர் அங்கு குவிக்கப்பட்டதுடன் தொல்பொருள் ஆய்வு பகுதிக்கு உட்படுத்த தீர்மானித்து இருந்தனர். இந்நிலையில் தொல்பொருள் பகுதியின் ஆலோசனையுடன் கடந்த 4 ஆம் திகதி அன்று மூடப்பட்டது.

பொதுவாக இக்கிராமத்திற்கு அருகாமையில் உள்ள இலங்கைத் துறை முகத்துவாரம், கல்லடி ஆகிய பகுதிகளில் நீண்ட காலமாக மலையின் மேல் இருந்த இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டு பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் இவ்விடத்தையும் பௌத்தர்களின் வாழ்விடமாக சித்திரிக்க இராணுவமும் பொலிஸ் பகுதியும் தொல்பொருள் பகுதியினூடாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இவ்விடயம் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனுக்கு அப்பகுதி மக்களால் அறிவிக்கப்பட்டதும் அவர் நேற்று முன்தினம் அவ்விடத்திற்கு விஜயம் செய்து உரிய இடத்தை பார்வையிட்டதுடன் மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இச்செம்பகநாச்சியம்மன் ஆலயமானது, இற்றைக்கு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதனை அண்மித்து ஏழு குளங்கள் உள்ளன. இவற்றில் நான்கு குளங்களில் தாமரைகள் மலர்கின்றன. இத்தகைய சிறப்புக்குரிய ஆலயப் பகுதி சுவீகரிக்கப்பட ஒரு போதும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவ்விடயத்தை மேலதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இது சம்பந்தமாக தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னெடுக்கவுள்ளதாக மக்களிடம் தெரிவித்துள்ளார். இவ்வேளை இப்பகுதி பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகம் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகம் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி லயன் கழகத் தலைவர் லயன் ரி. முருகதாசன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் ஜெயவக்சலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள மூன்றாவது கழகம் இதுவாகும். (ஸ்ரீ-3-29)

## புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு பிரதேசசபை அனுமதி பெறப்படவேண்டும்

### பிரதேச சபை செயலர் தெரிவிப்பு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு சபையின் அனுமதி பெறப்படவேண்டுமென நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் காலங்களில் அனுமதி பெறாமல் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அத்துடன் உரிமையாளர்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)




வடமாகாண பாடசாலைகளில் வீட்டுத்தோட்டம் அமைக்கும் திட்டம் முதன்முறையாக பூநகரி முக்கம்பன் தமிழ்ப் பாடசாலையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதையும் தென்னங்கன்று ஒன்றை நடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என். குமார்)


# ஆனந்தத்தின் வழி



ஆன்மீகம் 17

### மோசமான பகுதிகளின் நிழல்

அலுவலகத்திலோ அல்லது வேலை செய்யும் இடத்திலோ, எல்லோரும் ஆனந்தமாக இருந்தால் எப்படி இருக்கும்? ஒவ்வொருவரும் அவர்கள் வேலையை முடிந்தவரை சிறப்பாக செய்வார்கள். எந்த வேலையாக இருந்தாலும், குறைந்த பட்சம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியம். மக்கள் ஆனந்தமாக இருந்தா



லும் அல்லது துக்கமாக இருந்தாலும், வேலை செய்யவேண்டிய விதத்தில் செய்யவேண்டும். நான் இப்போது ஆனந்தமாக இருக்கிறேன் என்பதற்காக தலையால் நடந்தா அலுவலகத்திற்குச் செல்லமுடியும்? தேவைக்கு ஏற்றபடிதான் வேலை நடக்கவேண்டும் என்பதால், நீங்கள் வெவ்வேறு பணி நிலைகளை அதற்கு ஏற்றபடி கையாளவேண்டும்.

பணிகளை ஒழுங்குபடுத்துவதில் பலவிடயங்கள் உள்ளன 100, 200 அல்லது 1000பேர் வேலைசெய்யும் இடத்தில், நீங்கள் எப்படித்தான் பணிகளை ஒழுங்குபடுத்தினாலும் ஏதாவது குறைகள் சில இருக்கத்தான் செய்யும். வேறு எவரோ தலையிடக்கூடிய மோசமான பகுதிகள் சில எப்போதும் இருக்கும். அதைத் தவிர்க்கவே முடியாது.

இது எப்போதும் இப்படித்தான். உலகில் எங்கும் தவறுகளே நடக்காத நிறுவனம் ஒன்றுகூடக் கிடையாது. அப்படி ஏதாவது ஒரு நிறுவனம் இருந்தால் உண்மையில் அங்கு எந்தவேலையும் நடக்கவில்லை என்று அர்த்தம். பணிகள் நன்கு நடப்பதற்கு கண்டிப்பாகப் பலரும் ஒரு இடத்தில் கூட வேண்டியது அவசியம். ஆனால் அப்படிக் கூடும் இடங்கள் மக்களுக்குப் பிரச்சனை அளிக்கும் இடங்களாகவே உள்ளன. ஒரே நேரத்தில் அதே பாதையைப் பலர் கடந்து செல்ல வேண்டியிருப்பதால், அவர்கள் சச்சரவுகளில் சிக்கிக் கொள்கிறார்கள்.

சில வேளைகளில் ஆனந்தமாக இருவர் இணைந்து செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தால், நிலைமை எப்படி இருக்கும்? தற்போது பிரச்சினைகள் சூழ்ந்துள்ள மோசமான இடங்கள் எனச்சொல்லப்படும் அனைத்துமே, ஆனந்தமானவர்கள் இணைந்து அருமையானவைகளை செய்யக்கூடிய இடங்களாக மாற்றிவிடும் இல்லையா? மக்கள் ஒன்று கூடி, கலந்து, எதையாவது இணக்கமாகச் செய்யக்கூடிய அந்தத் துண்டு துண்டான வேலைகள்தான் பிரச்சினைகளுக்குரிய பகுதிகளாகும். தங்களது வேலைகளை அவர்கள் தனித்துச் செய்வதில் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது.

உங்களது பணிகள், வேறு சிலரது பணிகளுடன் கலந்து, அதன் பின்னர் மேற்கொண்டு செல்லவேண்டிய கட்டங்களும் உள்ளன. அங்குதான் பிரச்சினையே முளைக்கிறது, இல்லையா? பணியிலேயே பிரச்சினை என்றால், அது வேறு. நான் பேசிக் கொண்டிருப்பது, மனிதர்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினையைப்பற்றி.

எந்த அலுவலகத்திலும், எந்தப் பணியிடத்திலும், பணியைப் பற்றிய பிரச்சினைகள் மலை போல் இருக்கின்றன. இந்த மனிதர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்திருக்கக்கூடிய சூழல் இருந்தால், உண்மையான பிரச்சினைகளை மிக எளிதாக சமாளிக்க முடியும். ஆனால் ஆனந்தம் என்றால் என்னவென்றே தெரியாத அவர்களை, ஒன்றிணைந்த அமைப்பாக ஆக்குவதென்பது மிகமிகக் கஷ்டமானது.

நீங்கள் ஆனந்தமாக இருக்கும் நாட்களில், நீங்கள் எந்த அளவிற்கு விட்டுக் கொடுப்பவர் என்பதை நினைத்துப் பார்த்ததுண்டா? உங்களது போக்கில் நீங்கள் எந்த அளவுக்கு விட்டுக் கொடுப்பவர்? நீங்கள் வளைந்து கொடுக்க எவ்வளவு தூரம் இசைவு கொண்டவர் என்பதை யோசித்ததுண்டா..? ஆனந்தமாக இருப்பதால், யாருக்கோ கால் மிதியாக இருக்கக்கூட நீங்கள் சித்தமாக இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் சந்தோஷமாக இல்லாதநாளில், உங்களைச் சுற்றியுள்ள உலகிடம் நீங்கள் எத்தகைய கோரிக்கைகளை வைக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெரியும்.

மக்களுடன் சேர்ந்து செய்ய வேண்டியவை நிறைய உள்ள உங்கள் பணியிடத்திற்கு நீங்கள் போனால், ஒருவரோடு இன்னொருவர் மோதிக் கொள்ளும் அளவிற்கு அங்கு நிறையச் சந்தர்ப்பங்கள் உள்ளன. பணிசெய்ய வேறு வழியில்லை.

ஆனால் அங்கு ஆனந்தமான மனிதர்கள் இருந்தால், ஒருவரோடு இன்னொருவர் கலந்து பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் வாய்க்கும். இதனைப் பெரிய அளவில் நிகழ்த்த சிறந்த சந்தர்ப்பமாக அது அமையும். துக்ககரமான மக்கள் ஒன்றுகூடினால், எல்லாம் பிரச்சினைதான். சொல்லப்போனால் அவர்களுக்கு அவர்களே பிரச்சினைதான்!

மக்கள் துக்ககரமாக இருப்பதற்குக் காரணமே, அவர்கள் சுத்தமாக வளைந்து கொடுக்காமல் இருப்பதால் தான். ஆனால் ஆனந்தமாக இருக்கும்போது, நீங்கள் மிகவும் வளைந்து கொடுக்கிறீர்கள்; இல்லையா?

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்-ஒரு நோக்கு

08

**த. துரைசிங்கம்**
(ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்)

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

பிரதேச மட்டத்திலும், மாவட்ட, மாகாணமட்டத்திலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். சிறுவர் இலக்கியப் படைப்பாளர் தம் நலன்கருதி இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படின் சர்வதேச மட்டத்திலும் நமது படைப்பாளர்களின் திறன் வெளிப்பட வாய்ப்பேற்படும்.

ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளம்பெற இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும். இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் வதியும் நமது சிறார்களுக்கு இலகுவான சொற்கள், எளிமையான மெட்டு, இனிய சந்தங்கள், சூழலில் காணும் பொருட்கள் ஆகியன கொண்டமைந்த பாடல்களும், கதைளும் பெரிதும் தேவையாக உள்ளன. அவை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் அமையின் இலகுவில் சிறுவர்கள் புரிந்து கொள்வர்.

இத்துறையில் நமது சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களின் கவனம் திரும்பவேண்டும். சிறுவர் இலக்கியம் வளம்பெற ஆவன அனைத்தும் செய்திடவேண்டும்.

### ஈழத்துச் சிறுவர் இலக்கியத் துறையில் நிலவும் குறைபாடுகள்

சிறுவர் இலக்கியத்துறையில் தமிழகத்துக்கே முன்னோடியாக விளங்கும் ஈழம் இன்று இத்துறையில் பின்தங்கி நிற்பதாகப் பேராசிரியர்கள் பலர் கூறிவருகின்றனர். இப் பின்தங்கலுக்கான காரணங்களையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

அண்மைக்காலமாகச் சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் படைப்போர் தொகை அதிகரித்தே உள்ளது. ஆனால் படைக்கப்படுவன யாவும் சிறுவர் இலக்கியங்கள் என்னும் தரத்திற்குரியனவா? என்பதையும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். வெறும் எதுகை மோனைச் சொற்களை வைத்துக் கொண்டு இலக்கண வழுக்களுடனும் எழுத்துப் பிழைகளுடனும் பிரசுரமாகும் நூல்களையும் பார்க்கிறோம்.

வசதி, வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் நோக்குடன் வெளிவரும் நூல்களால் எதிர்பார்க்கப்படும் விளைதிறனை பெறமுடியாது சிறுவர்கள் ஏமாற்றமுறுகின்றனர்.

நவீன அறிவியல் சாதனங்கள், அறிவியல் குறித்தபடைப்புக்கள் பெருமளவில் காணப்படுவதாயில்லை. இக்குறைபாடு நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. அறிவியல் வளர்ச்சி, நவீன தொழில் நுட்பவளர்ச்சி பயன்தரும் விழுமியக் கருத்துக்கள், புவியியல், வரலாறு தொடர்பான உண்மைகளை எடுத்துக் கூறும் வகையிலான படைப்புக்களையே இன்றைய சமூகம் அவாவி நிற்கிறது. இதற்கு ஏற்றவகையில் சிறுவர் இலக்கியம் படைப்போர் இயங்கவேண்டும்.

வளர்ந்து வரும் இளம் சந்ததியினரை நல்வழிப்படுத்தவும், நமது பண்பாட்டு விழுமியங்கள் மறைந்து போகாது பாதுகாக்கப்படவும் சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள் தம் சிந்தனையைத் செலுத்த வேண்டும்.

சிறுவர் நூல் வெளியீட்டை ஊக்குவிக்கும் வகையில் கல்வியமைச்சு, தேசிய ஆவண ஆக்கல்சபை, மாகாண சபைகள், பிரதேசசபைகள் ஆகியன சிறுவர் நூல்களைப் பெருமளவில் கொள்வனவு செய்து நூல்வெளியீட்டாளர்களுக்கு ஆதரவு நல்க வேண்டும். சிறுவர் இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகளைக் காலத்துக்குக் காலம் நடத்துவதன் மூலம் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களின் கருத்தரங்குகளைத் காலத்துக்குக் காலம் நடத்துவதன் மூலம் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ளவும் வழிசெய்ய வேண்டும்.

### முடிவுரை


ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கால் கொண்ட சிறுவர் இலக்கியம் இருபதாம் நூற்றாண்டில் பலதுறைகளிலும் செழிப்புற்று வளர்ந்துமையை வரலாறு நன்குணர்த்துகிறது.

ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகளான சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரம் போன்றோரின் அடியொற்றி இன்று நூற்றுக்குமேற்பட்ட கவிஞர்கள் உருவாகியுள்ளனர். இவர்களது படைப்புக்கள் குறித்துக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். எனினும் ஒருசிலர் உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் தகுதிபடைத்தோராகத் திகழ்வது பெருமைக்குரியதாகும்.

ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளம்பெறச் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்கள் சிறுவர்களது அறிவும் ஆர்வமும் மேம்படத்தக்க படைப்புகளை அவர்களது உளவியல்புகளை மனதிற்கொண்டு படைத்திட முன்வர வேண்டும்.

நவீன உலகுக்கேற்ப அறிவியல் சார்ந்த உண்மைகளை, யதார்த்த பூர்வமானதெனக் கருதப்படுவனவற்றைச் சிறுவர்கள் அறிந்திட வழி செய்ய வேண்டும். இதுவே சிறுவர் உலகுக்கு நாமாற்றும் பெரும் பணியாக அமைவதாக.

*(முற்றும்)*





செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 29ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நிறுவன தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரான்ஸ் நாட்டு அன்பர்களான திருமதி க.விஜயகுமார் சியாமளா, திருமதி ச.விஜயகுமார் வசந்தி ஆகியோரினால் வழங்கப்பட்ட அலுவலக அலுமாரி, கணனி மேசை, கணனிக் கதிரை என்பன மேற்படி நிறுவனத்தினரிடம் கையளிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# குடிசன மதிப்பீட்டிற்கு ஆதரவு வழங்குங்கள்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

30 வருடங்களின் பின்னர் நாடளாவிய ரீதியாக நடத்தப்படும் குடிசன மதிப்பீட்டுக்காக ஆதரவு வழங்குவது பொதுமக்களின் கடமை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி வாசஸ்தலத்தை பட்டியலிடும் நிகழ்வில் கலந்துகொண்டு இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தமுறை குடிசன மதிப்பீடு 3 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக நாட்டிலுள்ள 14 ஆயிரத்து 116 கிராம சேவையாளர் பிரிவுகளை வரைபடமாக்கும் நடவடிக்கை தற்போது நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் இரண்டாம் கட்டமான குடியிருப்புக்களை பட்டியலிடும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது. (ஸ்ரீ-2)

# வவுனியா நகரசபைக்கு புதிய தலைவரை நியமிப்பதில் தொடர்ந்தும் இழுபறி

வவுனியா நகரசபைத் தலைவராக இருந்த எஸ்.என்.ஜி.நாதன் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து வெற்றிடமாகவுள்ள தலைமைப் பதவிக்குப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்காக நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் எதுவித முடிவுமின்றி முடிவடைந்துள்ளது.

வவுனியா நகரசபை உறுப்பினர்கள் நகரசபைக்கான தேர்தலில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளருமான மாவை சேனாதிராஜா மற்றும் முக்கியஸ்தர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உப தலைவரான எம்.எம்.ரதனையே தலைவராக நியமிக்கப் போவதாகவும் அவருக்கு சபை உறுப்பினர்கள் ஆதரவளிக்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கேட்டுக் கொண்டார்.

ஆயினும், ஊழல் நடவடிக்கைககள் தொடர்பாக முன்னாள் தலைவருடன் உபதலைவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் இருப்பதனால் அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியாது என்று உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

எனினும், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எந்த விசாரணை முடிவும் தெரிவிக்கப்படவில்லை என்பதால் அவர் மீது தாங்கள் குற்றம் சுமத்தமுடியாது என்று தெரிவித்த மாவை சேனாதிராஜா இது குறித்து பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் மீண்டும் ஆராயப்பட்டு முடிவெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

ஆயினும் இந்தக் கூட்டத்தில் தலைவர் பதவிக்கு ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள இழுபறி குறித்து நகரசபை உறுப்பினர்கள் பெரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# பிராந்திய பாதுகாப்பை பலப்படுத்த சார்க்போல் உருவாக்கப்பட வேண்டும்

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

சர்வதேச பொலிஸ் சேவையான இன்ரர்போலைப் போன்று பிராந்தியத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த சாக்போல் என்ற பொலிஸ் சேவை உருவாக்கப்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெற்காசிய பிராந்திய வலய நாடுகளைச் சேர்ந்த பொலிஸ் பிரதானிகளின் விசேட மாநாடொன்று கொழும்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போது, பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடு கடந்த குற்றச்செயல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கு பிராந்திய நாடுகளுக்கிடையில் கூடுதல் ஒத்துழைப்பு அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற [illegible]கருத்தரங்கின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் இம்மாநாட்டில் மீளாய்வு செய்யப்படும் என பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.04 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1521 - பெர்டினென்ட் மகலன் பிலிப்பைன்ஸின் சேபு தீவை அடைந்தார்.

★1541 - பிரான்சிஸ் சேவியர் போர்த்துக்கீச இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டு லிஸ்பன் நகரில் இருந்து புறப்பட்டார்.

★1795 - பிரான்ஸ் மீற்றர் அளவு முறையை அறிமுகப்படுத்தியது.

★1827 - ஆங்கிலேய வேதியியலாளர் ஜோன் வோக்கர் தான் கண்டுபிடித்த தீக்குச்சியை விற்பனைக்கு விட்டார்.

★1906 - வேசுவியஸ் மலை தீ கக்கியதில் நேப்பில்சில் பலத்த சேதம் ஏற்பட்டது.

★1906 - ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் மொரோக்கோ வந்தது.

★1927 - முதலாவது தொலைதூர தொலைக்காட்சி சேவை வோஷிங்டன் டிசி, நியூயோர்க் நகரம் ஆகியவற்றிற்கிடையில் இடம்பெற்றது.

★1928 - வால்ட் டிஸ்னி தனது புகழ்பெற்ற கார்ட்டூன் பாத்திரமான மிக்கி எலியின் படத்தை வரைந்தார்.

★1939 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி அல்பேனியாவை முற்றுகையிட்டது.

★1942 - இரண்டாம் உலகப் போர்: ஆட்மிரால்ட்டி தீவுகளை ஜப்பான் கைப்பற்றியது.

★1943 - யூதப் படுகொலைகள்: உக்ரேனில் டெரெபோவ்லியா என்ற இடத்தில் நாசிகள் 1,100 யூதர்களை அரை நிர்வாணமாக்கி நகர வீதிவழியே அழைத்துச் சென்று பின்னர் அவர்களைச் சுட்டுக் கொன்று புதைத்தனர்.

★1945 - இரண்டாம் உலகப் போர்: உலகின் மிகப்பெரும் போர்க்கப்பலான ஜப்பானின் யமாட்டோ ஒக்கி னாவா அருகில் தென்கோ நடவடிக்கையின் போது அமெரிக்கப் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது.

★1946 - பிரான்ஸிடம் இருந்தான சிரியாவின் விடுதலை அங்கீகரிக்கப்பட்டது.

★1948 - சீனாவின் ஷங்காயில் பௌத்தமத தலம் ஒன்று எரிந்ததில் 20 புத்த குருக்கள் கொல்லப்பட்டனர்.

★1963 - யூகோஸ்லாவியா சோசலிசக் குடியரசாகியது. மார்ஷல் டீட்டோ ஜனாதிபதியானார்.

★1964 - ஐபிஎம் தனது System/360 ஐ அறிவித்தது.

★1978 - யாழ்ப்பாணத்தில் இலங்கையின் பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை உட்பட பல பொலிஸார் போராளிகளால் கொல்லப்பட்டனர்.

★1978 - நியூத்திரன் குண்டு தயாரிக்கும் திட்டத்தை ஐக்கிய அமெரிக்கா கைவிட்டது.

★1983 - ஸ்ரோரி மஸ்கிரேவ், டொன் பீட்டர்சன் இருவரும் மீள் விண்ணோடத்தில் இருந்து விண்ணில் நடந்த முதல் வீரர் களானார்கள்.

★1989 - கொம்சொமோலெட்ஸ் என்ற சோவியத் நீர்மூழ்கிக் கப்பல் நோர்வேயில் விபத்துக்குள்ளாகி மூழ்கியதில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

★1992 - ஸ்ருப்ஸ்கா குடியரசு விடுதலையை அறிவித்தது.

★1994 - ருவாண்டாவின் கிகாலியில் டுட்சி இனத்தவர்களை அழிக்கும் படலம் ஆரம்பமானது.

★2001 - மார்ஸ் ஒடிசி விண்கலம் ஏவப்பட்டது.

★2003 - அமெரிக்கப் படைகள் பக்தாத் நகரைக் கைப்பற்றினர். சதாம் உசே னின் அரசு இரு நாட்களின் பின்னர் வீழ்ந்தது.

★2007 - தமிழ்நாட்டில் சென்டூரில் நெடுஞ்சாலை அமைப்புக்கென கொண்டு செல்லப்பட்ட வெடிபொருட்கள் அடங்கிய வாகனம் ஒன்று வெடித்ததில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1889 - கப்ரியேலா மிஸ்ட்ரல், நோபல் பரிசு பெற்ற சிலி எழுத்தாளர் (இ. 1957)

★1920 - ரவி சங்கர், சிதார் கலைஞர்

### இறப்புகள்

★1761 - தோமஸ் பேயிஸ், ஆங்கிலேய கணிதவியலாளர் (பி. 1702)

World Health Organization

1948 - உலக சுகாதார நிறுவனம் (WHO) ஐக்கிய நாடுகள் சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

# புற்றுநோய்க்காக வழங்கப்படும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புற்றுநோய்க்காக வழங்கப்படும் 14 வகை மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப் பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

புற்றுநோய்க்காகப் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்களை ஒரேயொரு நிறு வனமே தமக்கு வழங்குவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனம் சுகாதார அமைச்சுக்கு மருந்துகளை விநியோகிக்காது தனியார் நிறு வனம் ஒன்றுக்கு வழங்கியுள்ளதாகவும் குறித்த மருந்துப் பொருட்கள் அதிக விலை க்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அரச வைத்தியசாலை களில் புற்றுநோய்க்காக வழங்கப்படும் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு விநியோகத்தர்களிடம் இருந்து புற்றுநோய்க்கான மருந்துகளைக் கொள் வனவு செய்து வறிய மக்களுக்கு வழங்க வேண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சட்டவிரோத மருந்து விற் பனைகளைத் தடுக்கும் வகையில் தேசிய வரையறை சட்டமூலம் ஒன்றை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஶ்ரீ-2)

# ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல்கள் பழைய முறைப்படி நடத்தப்படும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் ஒத்திவைக்கப் பட்ட தேர்தல்கள் பழைய முறைப்படியே நடாத்தப்படுமென ஆளும் கட்சி பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லை நிர்ணயத்திற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் ஒத்திவைத்த தேர்தல் களை புதிய சட்டத்தின் பிரகாரம் நடத்தப்பட மாட்டாது. சட்டங்களை அமுல்படுத்த கால அவகாசம் தேவை. அதனால் ஒத்திவைக் கப்பட்ட தேர்தல்கள் நடந்த பின்னரே புதிய சட்டம் அமுல்படுத்தப்படும்.

இந்தத் திருத்தம் மூலம் உள்ளூராட்சி சபையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. கிராம, நகர அபிவிருத்தியில் இந்த முறை அதிகம் பங்களிக்கும்.

தேர்தலுக்கு அதிகம் செலவிடுவது குறை யும். தொகுதி மூலம் உருவாகி உயர் பதவிக்கு வர இந்த முறை மூலம் அதிக வாய்ப்பு ஏற் படும். தற்பொழுதுள்ள முறையால் சகல தொகுதிகளும் உறுப்பினர் தெரிவாவது கிடையாது என மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# பேலியகொடையில் கப்பம் பெற்று வந்த 20 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு பேலியகொடை மீன் சந்தையிலுள்ள விற்ப னையாளர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வந்த சந்தேக நபர்கள் 20 பேர் நேற்று காலை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின ரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனா நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தையில் மீன் விற்பனையா ளர்களை அச்சுறுத்தி அவர்களிடமிருந்து பணம் பெறும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவுக்கு மீன்வளத்துறை அமைச்சினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே சந்தேக நபர்கள் சுற்றிவளைக் கப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை விசேட குற் றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வரு கின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று காலை குறித்த மீன் சந்தையில் இரு தரப்பினர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் காயம டைந்த மூன்று பேர் கொழும்பு தேசிய வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15 அரச மற்றும் வங்கி விடுமுறை

## அரச நிர்வாக அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி அரசாங்க மற்றும் விசேட வங்கி விடுமுறை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சுற்றறிக்கை சகல அமைச்சுக்களினது செயலாளர்களுக்கும் மாகாண சபைகளின் பிரதான செயலாளருக் கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் தலைமை அதிகாரி களுக்கும் மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் பி.பீ.அபேகோன் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# வடக்கு- கிழக்கிலிருந்து நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு 5 ஆயிரம் எழுத்துமூல முறைப்பாடுகள்

வடக்கு- கிழக்கிலிருந்து 5 ஆயிரம் எழுத்து மூல முறைப்பாடுகள் நல்லணக்க ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள தாக ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கில் இருந்து கிடைக்கப்பெற் றிருக்கும் சுமார் 5ஆயிரம் முறைப்பாடுகள் தற்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி ஜனா திபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளை ஆராய் வதற்காக 2010 ஆம் ஆண்டு மே 15 இல் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவை ஜனாதிபதி நிய மித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து விசாரணை

உலகக்கிண்ண இறுதிப் போட்டியின் போது மும்பை பொலிஸாருக்கு விடுக் கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுகின்றன.

இதன்கீழ் நோர்வே அரசாங்கத்தின் உத வியை நாடியுள்ளதாக இந்திய கூட்டு பொ லிஸ் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண இறுதிப்போட்டி இடம் பெற்ற வான்கடே மைதானத்தில் 30 குண் டுகள் வைக்கப்பட்டுள்ளதாக மின்னஞ்சல் ஒன்று போட்டி ஆரம்பிக்கப்படுவதற்கு 3மணி நேரத்திற்கு முன்னர் மும்பை பொலிஸா ருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து மும்பை பொலிஸார் பார் வையாளர்கள் சந்தேகப்படாதபடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் போது குறித்த மின்னஞ்சல் செய்தி பொய் யானது என தெரிய வந்தது.

அதேநேரம் அது நோர்வேயிலுள்ள இணை யம் ஒன்றினூடாக அனுப்பப்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த போலியான பரப் புரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் அனு தாபிகள் மேற்கொண்டிருக்கலாம் என்ற சந் தேகத்தை நிராகரிக்க முடியாதென இந்தியக் கூட்டு பொலிஸ் ஆணையாளர் கிமாஞ் சுல் றோய் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-3)

# வருடாந்த விளையாட்டு விழா

வேதாரணியேஸ்வரா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று வியாழக் கிழமை மாலை 2 மணிக்கு யா/ கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய மைதானத் தில் வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு கட்டடநிர்மாணத்துறை அமைச் சின் முன்னாள் செயலாளர் வி.செ.சுவாமி நாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழு ம்பு பொறியியலாளர் இளையதம்பி சாந்த சொரூபன், கௌரவ விருந்தினர்களாக வடம ராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்ப ணிப்பாளர்,க. தில்லைநாதன் யா/ கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய அதிபர் த.ரவீந்திரன், உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் ச. இராசநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-2)



யா/ ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி கு.வேலாயுதமூர்த்தி வெற்றியீட்டிய இல்லத்திற்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# உலகளவில் சர்வாதிகாரிகளை உருவாக்கியதே அமெரிக்காதான்

## ஈரான் ஜனாதிபதி காட்டம்

(டுபாய்)

உலகளவில் சர்வாதிகாரிகளை உருவாக்கியதே அமெரிக்காதான் என்று ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வளைகுடா நாடுகளில் பெரும்பாலான நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்த நாடுகளில் எல்லாம் சர்வாதிகார ஆட்சிதான் நிலவுகிறது. இந்த நாடுகளில் எல்லாம் கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதே ஈரான்தான் என்று கூறப்படுகிறது. இதனால் வளைகுடா நாடுகள் மாநாடு நடத்தி ஈரானைக் கண்டித்தன.

அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் இந்த மாநாடு சவுதி அரேபியாவில் நடந்தது. இதில் கிளர்ச்சியை ஈரான்தான் தூண்டி விடுவதாகவும் பிற நாடுகளின் உள் விவகாரத்தில் தலையிட்டுக்குழப்பம் விளைவிப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில் ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் ஒரு சீன நிருபருக்கு அளித்த பேட்டியில்,

அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் பொக்கெற்றை நிரப்பிக் கொள்வதிலேயே கவனமாக இருக்கும். இந்த நாடுகள் யாருக்கும் வணக்கம் தெரிவிக்கமாட்டாது. அந்த நாடுகள் உங்களைப் பார்த்து ஹலோ என்று சொன்னால் அவர்கள் அதற்கான வட்டியை 100 மடங்கு வசூலித்து விடுவார்கள். உங்கள் பொக்கெற் காலியானால்தான் உங்களை விடுவார்கள்.

இப்போது சர்வாதிகாரிகளாக இருப்பவர்கள் எல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவாலும் இங்கிலாந்தாலும் சர்வாதிகாரிகளாக உருவாக்கப்பட்டவர்கள் தான். அந்த நாடுகள் தான் சர்வாதிகாரிகளைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றன.

அந்த நாடுகளால் ஆதரிக்கப்படாத ஒரு சர்வாதிகாரியைக் கூட நாம் பார்க்கமுடியாது. எங்கேயாவது புரட்சி நடந்தால் எங்கேயாவது கொடுங்கோல் சர்வாதிகாரி ஆட்சி நடத்தினால் அந்த நாடுகள் எல்லாம் அமெரிக்காவின் ஆதரவு நாடுகளாக தான் இருக்கும்.

இன்று அவர்கள் திடீரென்று மக்களின் ஆதரவாளர்களாகி விட்டார்கள். ஆனால் 4 அல்லது 5 மணிநேரத்தில் அவர்கள் சமரசத்திட்டத்துடன் வருவார்கள். அதன்பின் அவர்கள் ஏவுகணைகளை வைத்துப் படையெடுப்பார்கள். அவர்களின் விமானங்கள் குண்டுகளை மக்கள் மீது வீசும் என ஈரான் ஜனாதிபதி தெரிவித்தார். (ஸ்ரீ-2)



# ரஷ்ய விண்வெளி ஓடம் விண்ணில் பாய்ந்தது

மூன்று விண்வெளி வீரர்களுடன் ரஷ்யாவின் சோயுஸ் எப்.ஜி விண்வெளி ஓடம் செவ்வாய்க்கிழமை விண்ணில் பாய்ந்தது.


கடந்த 1961 ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி ரஷ்யாவின் யூரி ககாரின் விண்கலத்தில் கஸகஸ்தானின் பைக்கானூர் விண்வெளி மையத்தில் இருந்து விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். இதுவே உலகின் முதல் விண்வெளிப் பயணமாக அமைந்தது. இந்த நிகழ்வின் 50 ஆண்டுநிறைவைக் குறிக்கும் வகையில் பைக்கானூர் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சோயுஸ் எவ்.ஜி.விண்வெளி ஓடம் செவ்வாய்க்கிழமை காலை விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்தவிண்வெளிஓடத்தில்ரஷ்யவிண்வெளி வீரர்கள் அலெக்ஸாண்டர் சமோக்யதியாவ் ஆண்ட்ரேபோரிஸன்கோஆகியோரும்அமெரிக்க விண்வெளி வீரர் ரெனால்டு கரன் ஆகியோர் ஏற்கனவே அமெரிக்காவின் டிஸ்கவரி ஓடத் சென்றுள்ளனர். (ஸ்ரீ)




# முஷாரப்பை நாடுகடத்த தயார்; இங்கிலாந்து பிரதமர் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் கேட்டுக்கொண்டால்முஷாரப்பை நாடு கடத்தி அவரது சொந்த நாட்டிற்கு அனுப்பி வைப்போம் என இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.


ஒருநாள் பயணமாக பாகிஸ்தான் சென்ற இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் அங்கு பிரதமர் யூசுப் ரஸா கிலானியை சந்தித்துப் பேசினார். பின்னர் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

பயங்கரவாதத்தினை ஒழித்துக் கட்டுவதில் இருநாடுகளுமே கடும் சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் பாகிஸ்தான் இங்கிலாந்தின் நெருங்கிய நட்புநாடு. பாகிஸ்தான் மக்களுக்கு கல்வித்துறைக்கு ரூ.650 மில்லியன் பவுண்ட் நிதி வழங்க இங்கிலாந்து முடிவு செய்துள்ளது.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் வழங்கப்படும். இதன்மூலம் 4 மில்லியன் குழந்தைகள் கல்வியறிவு பெறுவர். முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலையில் முஷாரப்பிற்கு தொடர்புள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தற்போது லண்டனில் உள்ள முஷாரப்பை கைது செய்ய பாகிஸ்தான் தொடர்ந்து வலியுறுத்தினால் அவரை நாடு கடத்தி சொந்த நாட்டிற்கு (பாகிஸ்தான்) திருப்பிஅனுப்புவோம் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# மகனைக் கொண்டு பின்லேடனை பிடிக்கத் திட்டமிட்ட புஷ்



தனது தந்தை ஒசாமா பின்லேடனை பிடிக்க முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் போட்ட மிகப்பெரிய திட்டம் குறித்து அவரது மகன் ஒமர் அதிரடித் தகவல்களை வெளியிட்டுள்ளார். கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் வர்த்தக நகரமான இரட்டை கோபுரம் அல்கொய்தா பயங்கரவாதிகளால் தகர்த்தப்பட்டது. இதற்கு அந்த அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் மூளையாக செயற்பட்டதாக கூறப்பட்டது.

பின்லேடனை பிடிக்க அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ் பல கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரது முயற்சிக்கு பலன்கிடைக்கவில்லை. இந்நிலையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் தனது பதவிக் காலத்தின் கடைசி நாளில் பின்லேடனை பிடிக்கும் முயற்சியாக அவரது மகன் ஒமரை வெள்ளை மாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஸ்பானிஸ் தினசரி பத்திரிகையான லா-வாங்கூராடிய எனும் பத்திரிகைக்கு பின்லேடனின் நான்காவது மகன் ஓமர் (வயது 29) அளித்துள்ள பேட்டியில், கடந்த 2009ஆம் ஆண்டு கட்டாரின் தலைநகர் டோகா வந்திருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் என்னை வெள்ளை மாளிகைக்கு அழைத்து, பின்லேடனை பிடித்து தர உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்காக எந்த நிபந்தனையும் தாம் விதிக்கமாட்டேன் என்றார். புஷ்ஷின் இந்த திட்டத்திற்கு நான் சம்மதிக்கவில்லை. பின்லேடன் ஒரு பயங்கரவாதிதான். அவரது கொள்கை எனக்கு பிடிக்கவில்லை. இன்று வரை நான் அவரிடம் எந்த தொடர்பும் வைத்துக் கொண்டதில்லை. எப்படியாயினும் அவர் என்னுடைய தந்தை. ஆகவே எனது தந்தையை பிடிக்க உதவமாட்டேன் என்று கூறினேன். இவ்வாறு அந்த பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகைநிர்வாகம்ஓமரின் இந்த அறிக்கைக்கு கருத்து கூற மறுத்துவிட்டது. (ஸ்ரீ-2)

# உலக வர்த்தகமையத் தாக்குதலில் ஈடுபட்டோர் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை

## ஒபாமா அறிவிப்பு

கடந்த 2001 செம்ரம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த உலக வர்த்தக மைய தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

இது குறித்து அமெரிக்க அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர்கடந்த 4ஆம்திகதி அளித்த பேட்டியில், உலக வர்த்தக மைய தாக்குதலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டுள்ள காலித் ஷேக் முகமது, வாலித் முகமது பின் அட்டாஷ், ரம்ஸி பின் அல் ஷிப், அலி அப்துல் அஜீஸ் அலி, முஸ்தபா அகமது அல் ஹவ்சவி ஆகியோர் மீது சிவில் நீதிமன்றத்துக்குப் பதிலாக இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 பேர் இராணுவ விசாரணையைத் தொடங்குமாறு பாதுகாப்பு அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது அமெரிக்காவின் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று 2009ஆம் ஆண்டு நவம்பரில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது திடீரென இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்துஎரிக்சொல்ஹெய்ம்கூறியதாவது, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது பெடரல் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படுவதாக இருந்தது. ஆனால் இதற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து எங்களது முடிவை மாற்றிக் கொண்டுள்ளோம்.

இந்த வழக்கின் ஆரம்பம் முதலே தேவையில்லாத சர்ச்சைகள் கிளம்பின. எனவே இந்த வழக்கில் அரசியல் முத்திரை குத்தப்பட வேண்டாம் என நாங்கள் விரும்பினோம் என்றார் அவர். உலக வர்த்தக மைய தாக்குதல் தொடர்பாக 2003ஆம் ஆண்டில் ஷேக் முகமது பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் கைது செய்யப்பட்டார்.

தாக்குதலில் ஈடுபட்டதாக தன்னைத் தானே அறிவித்துக் கொண்டவர் ஷேக் முகமது. அவருக்கு உதவியதாக மற்ற 4 பேரும் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதி இந்த முடிவுக்கு குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். நீண்ட காலமாக நடந்து வரும் இந்த வழக்கின் விசாரணை இதன் மூலம் துரிதமடையும். உலக வர்த்தக மைய தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு இதன்மூலம் தண்டனை கிடைக்கும். குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை கிடைக்காதா என்று ஏங்கியுள்ள தாக்குதலில் இறந்தவர்களின் குடும்பத்தார் இதன்மூலம் நிம்மதி அடைவர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# கடாபி பதவி விலகமாட்டார் லிபிய அரசாங்கம் அறிவிப்பு


(டிரிபோலி)

லிபியாவில் அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ள தயார். ஆனால், மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தி வருவது போன்று ஜனாதிபதி கடாபி பதவி விலகுவதற்குத் தயாரில்லை என லிபிய அரசு தெரிவித்துள்ளது. வட ஆபிரிக்க நாடான லிபியாவில் ஜனாதிபதி கடாபி பதவி விலகக்கோரி கடந்த ஒரு மாத காலமாக மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்காவும் இவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி கடாபியின் செய்தித்தொடர்பாளர் மௌசா இப்ராஹிம் அல்-ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் கூறியிருப்பதாவது; லிபியாவில் அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ள அரசு தயாராக உள்ளது. இதனால் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால் சில மேற்கத்திய நாடுகள் கிளர்ச்சியாளர்களுக்கு சாதகமாக செயற்பட்டு வருகின்றன. இந்நிலை தொடர்ந்தால் சோமாலியா, ஈராக் போன்று லிபியா தள்ளப்பட்டு விடும். எனவே பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காணப்படும். மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தி வருவது போன்று ஜனாதிபதி கடாபி பதவி விலகல் என்ற பேச்சுக்கே இடமில்லை என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# தமிழக தேர்தல் முடிவால் மத்தியில் அரசியல் மாற்றம்



## சீதாராம் யெச்சூரி தெரிவிப்பு

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளால் மாநிலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதோடு மத்தியிலும் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி குறிப்பிட்டார். சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது,

தமிழகம் முழுவதும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எழுச்சி மக்களிடம் ஏற்பட்டுள்ளதைத் தெளிவாக உணர முடிகிறது. வாக்காளர்களுக்கு பண விநியோகம் செய்வது உள்ளிட்ட அரசியல் சாராத பிரச்சினைகள் தமிழக தேர்தல் களத்தில் முக்கியமாக விவாதிக்கப்படுகின்றன.

எனினும் தேர்தலில் பண பலம் ஆதிக்கம் செலுத்துவதை தடுப்பதற்காக தேர்தல் ஆணையம் ஏராளமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அடுத்து அமையவுள்ள ஆட்சியானது, மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட நாங்கள் பாடுபடுவோம் என்ற வாக்குறுதியை முன்வைத்து மார்க்சிஸ்ட் கட்சி இந்த தேர்தலைச் சந்திக்கிறது. தமிழகத்தில் மார்க்சிஸ்ட் கட்சி போட்டியிடும் 12 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

இப்போதைய தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான அணி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழக மக்கள் தெளிவான தீர்ப்பை அளிப்பார்கள் என நம்புகிறோம். எனவே, தொங்கு சட்டப் பேரவை அமைவதற்கான வாய்ப்பு இல்லை.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான அரசில் தி.மு.க. முக்கிய கூட்டாளி. எனவே, தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஏற்படும் வீழ்ச்சி மாநிலத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதோடு தேசிய அரங்கிலும் பல தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, மத்திய அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழகம் வருகிறார் பிரதமர் மன்மோகன்

### ஏப்ரல் 9 இல் கோவையில் பிரசாரம்

(கோவை)

காங்கிரஸ்-தி.மு.க.கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரதமர் மன்மோகன்சிங் கோவையில் எதிர்வரும் 9ஆம் திகதி பிரசாரம் மேற்கொள்கிறார். இத்தகவலை கோவையில் நிருபர்களிடம் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் தங்கபாலு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகம் வரும் பிரதமர் மன்மோகன்சிங் மத்திய, மாநில அரசுகளின் சாதனைகளை விளக்கி பிரசாரம் மேற்க்கொள்வார் என்றார்.

தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க.-காங், கூட்டணி வெற்றி பெறும். 6ஆவது முறையாக மீண்டும் கருணாநிதி தமிழக முதல்வர் ஆவார் என்று தெரிவித்தார்.

இதேவேளை தமிழக சட்டசபை தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. தி.மு.க.தலைவர் கருணாநிதி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, தே.மு.தி.க.தலைவர் விஜயகாந் என தலைவர்களின் பிரசார புயல் ஒருபக்கம். அவர்களுக்கு ஆதரவாக களத்தில் இறக்கி விடப்பட்டுள்ள நடிகர் பட்டாளம் ஒருபக்கம் என பிரசாரம் அனல் பறக்கிறது. (ஸ்ரீ-2)

# அ.தி.மு.க. ஆட்சியில் சாதனைகள் எதுவுமில்லை; வேதனைகளே அதிகம்

## அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் சாதனைகள் எதுவுமில்லை. வேதனைகள் தான் அதிகம் என மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

சிங்கா நல்லூர் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளர் மயூரா எஸ். ஜெயக்குமாரை ஆதரித்து நேற்று முன்தினம் நடந்த பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில் ,

தேர்தல் அறிக்கை என்றால் முன்பெல்லாம் கட்சி அலுவலகங்களில் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் கடந்த 2006 இல் புதுமையான தேர்தல் அறிக்கையை தெளிவாகவும் ,துணிவாகவும் திமுகவெளியிட்டது. கிலோரூ2க்குஅரிசி, இலவச வண்ணத் தொலைக்காட்டிப்பெட்டி, 2ஏக்கர் இலவச நிலம், கூட்டுறவு கடன் தள்ளுபடி என ஏராளமான திட்டங்கள் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் இருந்தது.

அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா, இந்த அறிக்கை குறித்து கேலியும் கிண்டலும் செய்தார். ஆட்சிக்கு வந்த உடனேயே வாக்குறுதிகள் அனைத்தையும் தி.மு.க அரசு நிறைவேற்றியது. கடந்தமுறை கேலி செய்தவர்கள் இப்போது அந்த அறிக்கையை கொப்பியடித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். அ.தி.மு.க ஆட்சியின்போது ஒரே நாளில் ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களை நீக்கம் செய்தது. சாலைப் பணியாளர்களை பணிநீக்கம் செய்தது. திருமண உதவித் தொகையை ரத்து செய்தது. கோயில்களில் ஆடு, கோழி பலியிட தடை விதித்தது போன்ற வேதனைகள் தான் நினைவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மீனவர்களின் ஆவிகூட கருணாநிதியை மன்னிக்காது

## விஜயகாந் ஆவேசம்



(சென்னை)

இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டு உயிரிழந்த மீனவர்களின் ஆவி கூட கருணாநிதியை மன்னிக்காது என இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தொகுதியில் பிரசாரம் செய்த தே.மு.தி.க.தலைவர் விஜயகாந் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. வேட்பாளர் முஜிபுர் ரகுமானை ஆதரித்து ஆர். எஸ். மங்கலம் திருவாடானையில் அவர் உரையாற்றுகையில்,

தமிழகத்தில் தண்ணீர் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. முந்தைய அ.தி.மு.க. காலத்தில் ஜெ. முதல்வராக இருந்த போது சென்னையைச் சுற்றி 150 கி.மீ தொலைவில் தண்ணீர் விநியோகம் செய்து வந்தனர். ஆனால் தற்போது எத்தனையோ திட்டங்கள் இருந்தும் தண்ணீருக்காக மக்கள் தவிக்கின்றனர். கருணாநிதி மக்களுக்கு சேவை செய்ய வரவில்லை. குடும்பத்திற்கு சேவை செய்யவே வந்துள்ளார். காங்கிரஸ் கூட்டணிக்கு 63 சீட் கொடுத்ததன் இரகசியம் என்ன தெரியுமா? குடும்பத்தினரை கைது செய்யமாட்டார்கள் என்பதற்காகத் தான்.

தேர்தல் முடிவுக்கு பின் குடும்பத்துடன் கைதாவது உறுதி. தமிழர்களின் உணர்வை கச்சதீவு மூலம் தாரை வார்த்து கொடுத்தார். இலங்கை கடற்படையால் 550 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் ஆவி கூட கருணாநிதியை மன்னிக்காது.

எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சியில் கூட்டணி வைத்திருப்பது பெரும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சி அமையும் என்ற பயத்தில் சில தொலைக்காட்சிகளில் விஜயகாந்த் தப்பா பேசுவார் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பதும் மீண்டும் மீண்டும் காட்சிகளை போடுவது மாகஉள்ளனர். இவ்வாறு விஜயகாந் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



# தமிழக தேர்தல் களம்

# தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் இனிமேல் நடைபெறாது

## சோனியா வாக்குறுதி

தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இனி நடைபெற மாட்டாது என சென்னையில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் காங்கிரஸ் தலைவி சோனியா உறுதியளித்தார்.

ஜனநாயக முற்போக்கு கூட்டணி தேர்தல் பிரசார பொதுக் கூட்டம் சென்னை தீவுத்திடலில் நேற்று மாலை நடந்தது. இதில் காங்கிரஸ் தலைவி சோனியா பேசியதாவது,

தமிழகம் இன்று முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஆதி திராவிட மக்களுக்கு உதவும் வகையிலும் மத நல்லிணக்கத்தை, ஒற்றுமையைப் பேணும் வகையிலும் தமிழகம் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. தமிழகத்தின் இத்தகைய திட்டங்களை பிற மாநில அரசுகளும் பின்பற்றும் வகையில் அரசின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன.

இத்தகைய திட்டங்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசு தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 9 ஆயிரத்து 675 கோடி ரூபாவிலிருந்து 17 ஆயிரத்து 500 கோடி ரூபாவாக உயர்த்தி வழங்கி மிக அனுசரணையாக இருந்துள்ளது. ஐந்தாண்டுகளாக இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகளை, சாதனைகளை கருத்தில் கொண்டு சென்றமுறை நீங்கள் வாக்களித்தீர்கள். இந்தமுறை கருணாநிதி அரசின் சாதனைகள் தொடர நீங்கள் வாக்களிக்க வேண்டும். இந்த கோரிக் கையை முன் வைத்தே நான் உங்கள் முன் நிற்கிறேன். வளர்ச்சியின் பயன்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பது காங்கிரசின் கொள்கை. தி.மு.க.வும் அதே கொள்கையைக் கொண்டிருப்பதால் இருவரும் இணைந்து செயற்பட்டு வருகிறோம்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் சம உரிமை பெறவும் அவர்கள் மறு வாழ்விற்காகவும் புனரமைப்பு பணிக்காவும் மத்திய அரசு பல்வேறு உதவிகளையும் தேவையான நிதி உதவியையும் செய்து வருகிறது. அங்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்காக மத்திய அரசு உதவியுள்ளது. அத்துடன் இலங்கையில் வாழும் தமிழர்கள் சம உரிமையுடன் வாழ்வதற்காக இலங்கை அரசின் விதிமுறைகளையே மாற்றிட நடவடிக்கை எடுத்தோம். தமிழக மீனவர்களின் நலன்களை காக்கும் வகையில் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இனி தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடே இல்லாமல் பார்த்துக் கொள்வோம் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல்காந்தி தமிழக தேர்தல் பிரச்சாரத்தை ஈரோட்டில் ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

மனிதனாக வாழும் ஒவ்வொருவனும் மெய்யாக உணரத்தக்க ஒரேமதம், அன்பு என்ற மதமே. –சத்ய சாயிபாபா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நடமாடிய ஞானத் தெய்வமே மீண்டும் எழுந்து வருக!

பகவான் சத்ய சாயி பாபா அவர்கள் உடல்நலம் குன்றியநிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி கோடிக்கணக்கான மக்களை ஆழ்ந்த துயரத்திற்கு ஆட்படுத்தியுள்ளது.

கோடிக்கணக்கான மக்களின் ஞானத் தெய்வமாக, ஆன்மிக ஊற்றாக விளங்கும் பகவானின் திருப்பணிகளால் இந்த வையகம் மாண்புற்றது.

காலத்திற்கு காலம் ஆன்மிக ஞானிகளை தந்தருளும் பூமியாக விளங்கும் பாரதத்தாய் தந்த ஞானக் கடவுளாக பகவான் சத்ய சாயி பாபாவை உலகம் போற்றி வழிபடுகின்றது.

பகவான் மீதான நம்பிக்கை – அவரின் ஆற்றுப்படுத்தல் என்பவற்றால் மீட்சி பெற்று புதுவாழ்வு வாழும் மாந்தர்கள் ஏராளம்.

பகவானின் சேவையில் தம்மை அர்ப்பணித்தவர்கள் அடைந்த பேரின்பம் அளவிடற்கரியது.

ஏழை மக்களுக்கு உதவுதல்,நோயாளிகளைப் பராமரித்தல்,அன்னம் அளித்தல், ஆதரவற்றவர்களுக்கு உதவிபுரிதல் என இன்னோரன்ன உதவிகளால் உலகம் முழுவதையும் பரவசப்படுத்திய ஞானசக்தி பகவானுக்கே உண்டு.

நாம் வாழும் இப்பூமியில் நடமாடும் தெய்வமாக விளங்கும் பகவானின் நம்பிக்கையில் வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்கள் பகவானின் உடல்நலம் பாதிப்படைந்தமையால் பதைபதைக்கின்றனர்.

உலகின் கண் பிறந்தவர்கள் என்றோ ஒரு நாள் இப்பொய்யுடலை விடுத்தாக வேண்டும் என்பது நியதி.

இந்நியதியிலிருந்து எவருமே விலகிக் கொள்ள முடியாது.

மிகப்பெரும் ஞானமகான் ரமணரிஷி புற்று நோயின் தாக்கத்திற்கு உட்பட்டார். ராமகிருஷ்ண பரமஹம்சரோ சுவாசத் தொற்றுக்கு இலக்கானார். எங்கள் யாழ்ப்பாண மண்ணில் நடமாடிய தவத்திரு யோகர் சுவாமிகளை காலில் ஏற்பட்ட கட்டு வாட்டியது.

ஞானிகள் ஆயினும் யோகிகளாயினும் அவர்களின் வாழ்வில் நடக்கின்ற அத்தனை நிகழ்வுகளும் மானிடர்க்கு உணர்த்தும் காரியங்கள் என்று உணர்வதே பொருத்துடையதாகும்.

அவ்வகையில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவிற்கு ஏற்பட்ட சுகவீனமும் அவ்வாறே.

ஊனத்தால் ஆக்கப்பட்ட இவ்வுடல் அழிவுறும். அழிவற்ற உயிர் இறைபரம்பொருளை அடைய வேண்டும்.

அதற்காக நம் வாழ்வை எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கும் பகவான், மீண்டும் இந்த மண்ணில் எழுந்து நடமாடவேண்டும். அவரின் ஞான வாழ்வில் இந்த உலகம் அமைதியும் சாந்தியும் பெற வேண்டும் என எல்லோரும் பிரார்த்திப்போமாக!

# தமிழ் கூட்டமைப்பின் நிலைப்பாட்டிற்கு ஜனநாயக மக்கள் முன்னணி பாராட்டு

தேர்தல் திருத்தச் சட்ட மூலங்கள் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்திலே தெரிவித்திருந்த கருத்துக்களும் இச்சட்ட மூலம் தொடர்பிலே கூட்டமைப்பு எடுத்திருந்த நிலைப்பாடுகளும் மிகவும் பாராட்டுக்குரியவை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்திலே விவாதிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் மற்றும் தேர்தல் திருத்தச் சட்ட மூலங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

உள்ளூராட்சி தேர்தல் உட்பட நடைமுறையில் உள்ள தேர்தல் முறை மாற்றப்படுவது இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மிகவும் முக்கியமான விவகாரமாகும்.

முழுமையான விகிதாசார முறைமை மாற்றப்பட்டு தொகுதி மற்றும் விகிதாசார முறைமைகள் கலந்த கலப்பு முறைமை நடைமுறை ஆக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை தவிர்த்து எதிர்காலத்தில் நடைபெறப் போகும் அனைத்து உள்ளூராட்சி, மாகாண சபை பாராளுமன்ற தேர்தல்கள் புதிய முறைமையின் கீழ் நடைபெறவிருக்கின்றன. இச்சட்ட மூலங்களில் பிரேரிக்கப்பட்டுள்ள புதிய மாற்றங்கள் வடகிழக்கிலே வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களை விட, வடக்கு கிழக்கிற்கு வெளியே பெரும்பான்மையினர் மத்தியிலே சிறுபான்மையாக வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை மிக அதிகமாக பாதிக்கப் போகின்றன.

இந்நிலையில் வடகிழக்கிற்கு வெளியே செயற்படும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும், மக்கள்பிரதிநிதிகளும் இச்சட்ட மூலம் தொடர்பிலே நியாயமான அக்கறையை வெளிக்காட்டாதது கவலைக்குரியதாகும். பாராளுமன்றத்திற்கு வந்து சபையிலே இச்சட்ட மூலத்தில் முன்னெடுக்கப்படும் திருத்தங்கள் எமது மக்களை எந்த அளவிற்கு பாதிக்கப் போகின்றன என்பது பற்றிய எமது கருத்துக்கள் மக்கள் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் இச்சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாற்று யோசனைகள் எடுத்துவைக்கப்பட்டிருக்க வேண்டும். சபை ஏற்றுக்கொள்கிறதோ, இல்லையோ நமது கருத்துக்கள் ஹன்சாட்டிலே பதிவாக வேண்டும். ஆனால் இவற்றை வட கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்யத் தவறியுள்ளார்கள்.

இந்நிலையில் வடகிழக்கிலே வாழ்கின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதுடன் வடகிழக்கிற்கு வெளியே சிறுபான்மையாக வாழும் தமிழ் மக்களின் நலன்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் நிலைப்பாடு அமைந்துள்ளது. அதேபோல் ஆளும் தரப்பிலே இடம்பெற்றிருந்தாலும் கூட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நண்பர் ரவூப் ஹக்கீம் இச்சட்ட மூலம் தொடர்பிலே ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு தமிழ் பேசும் மக்கள் தலைவர்களையும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் என்ற முறையில் பாராட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளேன் என்றார். (ச–5)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நாம் இறைவனின் விருப்பப்படியே வாழ்கிறோம் என்பதற்கு என்ன சான்றுகள் உள்ளன? (யோ:5:31–47)

ம. பிரான்சிஸ்க், கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.

இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தை முன்னிட்டே, குற்றவாளி கொலை செய்யப்பட வேண்டும்.ஒரே சாட்சியின் வாக்கு மூலத்தைமுன்னிட்டுஎவரும் கொலை செய்யப்படலாகாது. (இ.ச.17:6) என்பது மோசேயின் காலத்தில் அவரது சட்டம்.எனவே எவரையும் தண்டிப்பதற்கு இரண்டு க்கு மேற்பட்ட சாட்சிகளின் வாக்கு மூலம் கட்டாயம் இங்கு தேவையா கின்றது. அன்றேல் குற்றவாளி கொலை செய்யப் படலாகாது. எப்படியாவது இயேசுவைக் கொன்றுவிட வேண் டும் என்ற பரிசேயரின் உள் எத்து உணர் வை உய்த்துணர்ந்த இயேசு, அவர்கள் பெரிதும் போற்றும் மோசே யின் சட்டத்தை எடுத்துச் சொல்லி, அதைச் சான்றுடன்எண் பித்துக் காட்டு கிறார்.

சாட்சி:1 யூதர்களும் பரிசேயர்களும் பெரிதும் போற்றும் திருமுழுக்கு யோவானின் இயேசுவைப் பற்றிய சாட்சியம் (யோவான்1 :19, 20,26, 29, 35, 36) ஆகிய நற்செய்தி பகுதிகள் சொல்கின்றன.கடவுளின் ஆட்டுக்குட் டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக் குபவர்.நானும் கண்டேன் இவரே இறை மகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்.

சாட்சி:2 யூதர்கள் வழிபடும் "யாவே" இறைவனின் சாட்சியம்.தந்தை இறைவனின் சாட்சியமாக நற்செய்தி நூல்கள் ஒருவாய்ப்பட ஒலிக்கின்றன."என் அன்பார்ந்த மைந்தர் இவரே.இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் " (மத்3:17, 17:5) "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மாற்1:11)"இவரே என் மைந்தர். நான் தேர்ந்து கொண்டவர் இவரே.இவருக்கு செவி சாயுங்கள் "(லூக் 9:35).

சாட்சி:3 தந்தை உரிய செயல்கள்: எளியோருக்கு நற்செய்தி, நலமற்றோருக்கு நலம் , சிறைப்பட்டோருக்கு உரிமை வாழ்வு.இவையே இறைவனால் அனுப்பப்பட்ட இயேசுவின் செயல்களாயின.

சாட்சி:4மறைநூல் இயேசுவின் வாழ்வில் நடந்த பலவற்றை முன் குறித் துக் காட்டின. நான் செய்யும் என் அன்புச் செயல்கள்,தியாகச் செயல் கள், இரக்கச் செயல்கள் போன்றன சொல்லும் சாட்சியம் போதாதா?

யூத முறைப்படி ஒருவருக்கு இரண்டு சாட்சிகள் போதும். ஆனால், இயேசு தனது பணியின் உண்மைத் தன்மையை நிருபிக்கமறுக்க இயலாத வகையில் நான்கு சான்றுகளை வழங்குகிறார். தீர்ப்பை எழுதியபின் விசாரணை செய்பவனுக்கு எத்தனை சாட்சியங்கள் இருந்து என்ன,அல்லாமல் என்ன. நாம் இறைவனின் விருப்பப்படியே வாழ்கிறோம் என்பதற்கு என்ன சான்றுகள் இருக்கின்றன என்று இத் தவக் காலத்தில் ஆய்வு செய்வோம். இனிதே இறைவனுடன் நடப்போம்.

# "தாயினும் நல்ல தலைவன் பகவான் பாபா"



பகவான் பாபா ஒருமுறை சென்னைக்கு வந்தபோது ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவரது தரிசனத்தை பெறுவதற்கும் அருளுரையைக் கேட்பதற்குமாக கூடியிருந்தனர். பகவான் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் போது சபையிலிருந்தோர் அனைவரும் மெய்மறந்து தெய்வீக அருளுரையினை கேட்டுக் கொண்டேயிருந்தனர். அவ்வேளை அங்கு நிலவிய நிசப்தத்தைக் குலைக்கும் வகையில் சிறு குழந்தையொன்று வீறிட்டு அலறியது. எல்லோரும் குழந்தையின் பக்கமே தமது பார்வையைச் செலுத்தினர். அந்நேரம் பகவான் தனது இரு கரங்களையும் உயர்த்தி அபயம் அளிப்பது போல் காட்டி பின் விரல்களை மடித்து கைகளை மூடிக் கொண்டார்.

சிறிது நேரத்தில் அருகிலிருந்த பக்தர் ஒருவருக்கு கையை விரித்துக் காட்டி,குழந்தை அலறியதற்கு இதுவே காரணமென 25 பைசா நாணயத்தைக் காட்டினார். தனது தாயின் மடியிலிருந்த குழந்தை அந்த 25 பைசா நாணயத்தை வாய்க்குள் விழுங்கி விட்டது. தொண்டையில் சிக்கிய அந்நாணயத்தின் தடங்கல் நிலையே குழந்தை வீறிட்டழ காரணமென பெற்ற தாய்க்கும் தெரிந்திருக்கவில்லை.

இதிலிருந்து தாயாக,குருவாக, நோய்க்கு மருந்தாக , பசிக்கு உணவாக, கருணைகூர் தெய்வமாக எல்லாம்வல்ல பிரபஞ்சத்து நாயகனாக பகவான் சாயி விளங்குகிறார் எனப் புரிகிறது. பகவான் சொல்கிறார்,I'm your mother ocean has limit, but my love is not limit.

பகவான் பாபாவை இதயத்தில் ஏற்றி வைத்து தியானம் செய்தால் அன்றிலிருந்து நாம் காண்பதெல்லாம் பகவான் பாபாவாகவே இருக்கும். செல்லுமிடமெல்லாம் பகவான் கூட வருவதாக உணருங்கள். செய்யும் செயலில் பாபா இருப்பதாகவே சிந்தியுங்கள்.

பகவானே எம்மைத் தீமை யிலிருந்து விடுவித்து நல்ல வழியில் அழைத்துச் செல்வார். வாழ்வில் எம்மையும் எம் மைச் சார்ந்தவர்களையும் கல்வி, செல்வத்தில் மிதக்க வைப்பார். எம் சந்ததியும் பிறப் பழிப்பில்லாத வாழ் நெறியில் திண றித் திளைக்கும் " நம்பு மனமே, சாயி நாதனை நம்பு மனமே"

ஜெய் சாய்ராம்

யாதவன்



வடமாகாண கல்வி அமைச்சும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் "நாம் பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்" எனும் தொனிப்பொருளில் மரக்கன்றுகளை நடும் தேசிய திட்டம் நேற்று பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மரக்கன்றினை நடுவதனையும் அதிபர், மாணவர் ஆகியோருக்கு மரக்கன்றுகள் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: என்.குமார்)*

# தேசிய அமைப்பாளராக ரவி கருணாநாயக்கவை பிரேரித்தமைக்கு சஜித் பிரேமதாச கடும் எதிர்ப்பு



ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப் பாளராக ரவி கருணாநாயக்கவை கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க பிரேரித்ததையடுத்து சஜித் பிரேமதாச கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக மொனராகல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிக்க வேண்டும் என்பது சஜித் பிரேமதாசவின் விருப்பமாகும். அவர் சஜித் பிரேமதாசவின் தீவிர ஆதரவாளர் என்பது அதற்கான முக்கிய காரணமாகும்.

ஆயினும் கட்சியின் தேசிய அமைப்பாளருக்கான ஆற்றல் ரவி கருணாநாயக்கவுக்கே இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கருத்து தெரிவித்துள்ளார். அத்துடன் பணபலம் பெற்ற மற் றும் ஆழமான அரசியல் அனுபவம் வாய்ந்தவர் என்றவகையில் அவரே அப்பதவிக்கு பொருத்தமானவர் என்பதாக பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதன்காரணமாக தேசிய அமைப்பாளரை இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு தவறிப் போயுள்ளது. அதனையடுத்து ஐ.தே.க.வின் செயற்குழு கூட்டத்தின் போது வாக்கெடுப்பின் மூலம் தேசிய அமைப்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது

## 150 பேரைக் காணவில்லை

சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த படகொன்று இத்தாலியின் கடற்பரப்பில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 150 பேர் வரை காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிக்கொண்டு அப்படகு பயணித்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதன் பயண இலக்கு இத்தாலியா அல்லது வேறு ஏதேனும் நாடா என்பது குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.

படகு வட ஆபிரிக்காவிலிருந்தே சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிக் கொண்டு பயணத்தை ஆரம்பித்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

லிபியா மற்றும் ஆபிரிக்காவின் பல்வேறு நாட்டவர்களும் பிரஸ்தாப படகில் இருந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை யைச் சேர்ந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகளும் அதில் பயணித்திருப்பதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. (ஸ்ரீ-2)

# பிரபல திரைப்பட நடிகை சுஜாதா மரணம்



(சென்னை)

பிரபல திரைப்பட நடிகை சுஜாதா சென்னையில் நேற்று காலமானார்.

அவள் ஒரு தொடர்கதை மூலம் திரையுலகத்திற்கு வந்த நடிகை சுஜாதா, ஏராளமான தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார். அன்னக்கிளி, அவர்கள், அந்தமான் காதலி, விதி ஆகிய படங்கள் சுஜாதா நடித்த பிரபலமான படங்கள். 1952இல் இலங்கையில் பிறந்த சுஜாதாவின் தாய்மொழி மலையாளம்.

கடந்த சில தினங்களாக உடல் நலக் குறைவின்றி இருந்த அவர் சென்னையில் நேற்று காலமானார்.

ஏராளமான தமிழ்ப்படங்களில் நடித்த சுஜாதா மலை யாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி மொழி படங்களிலும் நடித்துள்ளார். முன்னணி நடிகர்களான சிவாஜி, கமல், ரஜினி உள்ளிட்டவர்களுடன் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நியமனக் கடிதம் வழங்கலும் ஊக்குவிப்புத் தொகை வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் IIIஆம் வகுப்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டோருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் வடமாகாணத்தினால் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ரி.இராசநாயகம் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் வாணிபஅலுவல்கள் அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# தடகள விளையாட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யா/கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜெ.ரூபசிங்கம், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)


# மூன்று வருடங்களில் சட்டத்தரணியாக உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

## ஆரம்பமாகின்றது சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்

இலங்கை சட்டக்கல்லூரிக்கான விண்ணப்பதாரிகளை அனுமதிப் பரீட்சைக்கு சிறப்பாக தயார் செய்ய மிகச்சிறந்த வழிகாட்டல் வகுப்புகளை நடாத்தவிருக்கின்றோம்.

கடந்த வருடங்களில் சட்டக்கல்லூரிக்கு தெரிவாகிய மாணவர்களில் 90% மானோருக்கு வழிகாட்டல் வகுப்புகளெடுத்து அவர்களின் வெற்றிக்கு வழிகாட்டிய சட்டத்தரணிகள், சட்டவிரிவுரையாளர்கள் அடங்கிய ஆசிரியர் குழாமின் வழிகாட்டலை நீங்களும் பெற்று அனுமதிப் பரீட்சையில் வெற்றி பெற இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

இப்பரீட்சையானது முற்று முழுதாக சட்டப்பாடப்பரப்பை உள்ளடக்கியதான "சட்டத்திற்கான பின்னணி" (**Background to the Law** ) எனப்படும் பின்வரும் பாடப்பரப்புகளை கொண்டதாகவே நடைபெறும்.

1. சட்டத்தின் தன்மை
2. சட்டத்தின் மூலங்கள்
3. அரசியலமைப்பு வரலாறு-கோல்புறூக் முதல் 1978 அரசியலமைப்பு வரை
4. மனித உரிமைகள்
5. சட்டத்தொழில்
6. ஐக்கிய நாடுகள் சபை
7. இன்று நிலவும் சட்டப்பிரச்சினைகள்

இப்பாடப்பரப்புக்கள் மீதான விரிவுரைகள், மீட்டலுக்கான குறிப்புகள், முன்னோடிப் பரீட்சைகள் போன்ற உங்களை தயார் செய்யும் பயிற்றுவித்தல் முறைகளுடன் ஏப்ரல் 16ஆம் திகதி சனிக்கிழமை முதல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

*இடம்* : *மங்கையற்கரசி வித்தியாலயம், நல்லூர் (நல்லூர் பின் வீதியில்)*
*காலம்* : *ஏப்ரல் 16ஆம் திகதி முதல் ஜூலை 3ஆம் திகதி வரையான நான்கு மாதங்களில் வரும் அனைத்து சனிக்கிழமைகளும்*
*நேரம்* : *காலை 9 மணி முதல் 2 மணி வரை*

உங்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் வகையில் ஒழுங்குகளை மேற்கொள்ள ஏதுவாக, பயிற்சி பெற விரும்பும் அனைவரும் ஏப்ரல் 14ஆம் திகதிக்கு முன்னராக உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும். வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலவசம்.

**தொடர்புகளுக்கு: சிவகுமார் தொ.பே: 0750395065, 0777184410**

(சி-2886)

# ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் திருவிழா

# சென்னையில் நாளை கோலாகல ஆரம்பம்

உலகக்கிண்ணத் திருவிழா முடிந்த நிலையில் கிரிக்கெட் ரசிகர்களை கோடையில் குளிர்விக்கும் விதமாக ஐ.பி.எல் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் திருவிழா நாளை சென்னையில் கோலாகலமாக ஆரம்பமாகிறது.

இம்முறை கூடுதலாக 2 அணிகள் பங்கேற்கின்றன. நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், டெக்கான் சார்ஜஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ், கிங்ஸ்லெவின் பஞ்சாப், டில்லி டேர்வில்ஸ், புனே வாரியர்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் என 10 அணிகள் மோதவுள்ளன.

மொத்தம் 51 நாட்கள் நடைபெறும் இத் திருவிழாவில் 74 ஆட்டங்கள் நடக்கின்றன. 13 நகரங்களில் போட்டிகள் நடத்தப்படுகின்றது.

ஆட்டங்களின் முடிபில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். இம்முறை புதிய முறை கொண்டுவரப்பட்டுள்ளது. லீக் ஆட்டத்தை தொடர்ந்து பிளே ஓப் இறுதிச்சுற்று நடத்தப்படுகிறது.

இதில் 3 ஆட்டங்கள் இடம்பெறும். புள்ளிகள் அடிப்படையில் லீக் சுற்றில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் முதல் ஆட்டத்தில் மோதும். இதில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறிவிடும். தோல்வி அடையும் அணிக்கு மற்றொரு வாய்ப்பு கொடுக்கப்படும்.

லீக் சுற்றில் 3 ஆவது, 4 ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிகள் 2 ஆவது பிளே ஓப் ஆட்டத்தில் ஆடும். இதில் வெற்றிபெறும் அணி எலிமினேட்டர் சுற்றில் முதல் பிளே ஓப் ஆட்டத்தில் தோல்வியடைந்த அணியுடன் மல்லுக்கட்டும். இதில் வெற்றிபெறும் அணிதான் இறுதியில் கால்பதிக்கும்.


இறுதிப்போட்டி மே 28 ஆம் திகதி சென்னையில் நடைபெறுகிறது.

கடந்த 3 தொடர்களிலும் ஆடிய வீரர்கள் தற்போது பல்வேறு அணிகளுக்கு மாறியுள்ளனர். பழைய வீரர்களில் சென்னை அணியில் தோனி, ரெய்னா, முரளி விஜய், அல்பி மோர்கல் ஆகியோர் மட்டுமே நீடிக்கின்றனர்.

மும்பை அணியில் சச்சின், ஹர்பஜன் சிங், பொல்லார்ட், மலிங்க ஆகியோரும் டில்லி அணியில் சேவாக்கும் பெங்களூர் அணியில் கோலியும், ராஜஸ்தான் அணியில் வோர்ன், வோட்சனும் நீடிக்கின்றனர். கொல்கத்தா, டெக்கான் சார்ஜர்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்சாப் ஆகிய 3 அணிகளும் ஒட்டுமொத்த அணியையே மாற்றி அமைத்துள்ளது.

முன்னணி வீரர்கள் பலர் அணிகள் மாறியுள்ளதால் இம்முறை தொடரில் சுவாரஸ்யம் அதிகரிக்கும்.

## புது இரத்தத்துடன் கொல்கத்தா



கடந்த மூன்று தொடர்களில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி உதைமேல் உதை வாங்கியது. பயிற்சியாளர் பிரச்சினை, அணித் தலைவர் பிரச்சினை என சிக்கித் தவித்தது. இம்முறை அணிக்கு புது ரத்தம் பாய்ச்சும் விதமாக அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பழைய வீரர்கள் யாருமே அணியில் இல்லை.

11.5 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்ட காம்பீரிடம் அணித்தலைவர் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதிரடியில் மிரட்டுவதற்காக யூசுப் பதான் ரூ.9.5கோடிக்கு வாங்கப்பட்டுள்ளார். சென்னை அணியில் ஆடிய வேகப்பந்து வீச்சாளர் பாலாஜி இந்த அணிக்குத் தாவியுள்ளார். கலிஸ், மோர்க்கன், சகீப் அல்ஹசன், ரேயன், டோஸ்சட், ஹடின், பிரெட்லீ, ஜேம்ஸ் பேட்டிங்சன் உள்ளிட்ட வெளிநாட்டு வீரர்களும் அணியைப் பலப்படுத்துவதற்காக ஆயத்தமாக உள்ளனர்.

அணித்தலைவர் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு விடிவுகாலம் பிறக்குமா என்பது இம்முறை தெரியும்.

### கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

**உரிமையாளர் :** ரெட் சில்லீஸ் என்டர்டைமென்ட் பிரைவெட் லிமிட்டெட்55.8%, தி சீ ஐஸ்லேண்ட் இன்வென்ஸ்மென்ட் லிமிட்டெட் 25.1%, ஜூகி சாவ்லா 20.1%,

**அணி மதிப்பு :** ரூ. 341 கோடி

**அணித்தலைவர் :** காம்பீர்

**அதிக ஏலத்தொகை வீரர் :** காம்பீர் **ஏலமதிப்பு :** 11 கோடி

**வீரர்கள் விபரம் :** காம்பீர் (அணித்தலைவர்), யூசுப்பதான், மோர்கன், ஜெய்தேவ் உனத்கட், அப்துல்லா, கோஸ்வாமி, சகீப் அல்ஹசன், மனோஜ் திவாரி, டோஸ்கட், மன்வீந்தர் பிஸ்சா, சமி, கலிஸ், பிரட் லீ, பாலாஜி, பேட்டின்சன், லட்சுமிரத்தன் சுக்லா

## வோர்ன் தந்திரம் பலிக்குமா?



ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலாவது தொடரில் சம்பியனாகி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பிரபலமே இல்லாத வீரர்களை வைத்துக்கொண்டு வோர்ன் தனது தந்திரத்தால் சம்பியன் வென்று கொடுத்தார். ஆனால் அடுத்த 2 தொடர்களிலும் அந்த அணி சொதப்பியது.

அணிக்கு பலம் சேர்த்த யூசுப் பதான் இம்முறை கொல்கத்தா அணிக்கு தாவிவிட்டார்.

கடந்த முறை ஆடிய வீரர்களில் வோர்ன், வோட்சன் மட்டுமே நீடிக்கின்றனர். அதிரடிக்கு பலம் சேர்க்க ரோஸ் ரெய்லர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். பெங்களூர் அணியில் ஆடிய ராவிட்டும் இங்கு இடம் மாறியுள்ளார். வேகப்பந்து வீச்சில் மிரட்டுவதற்கு ஷோன் தைட் தயாராகவுள்ளார்.

சுழற்பந்து வீச்சில் பலம் சேர்க்க போத்தா களமிறக்கப்படுகிறார். இவர்களை தவிர மற்ற வீரர்கள் அனைவருமே பிரபலமில்லாதவர்கள்தான்.

### ராஜஸ்தான் றோயல்ஸ்

**உரிமையாளர்கள் :** டிரெஸ்கோ இன்டர்நேஷனல் லிமிடெட் 44.1%, எமர்ஜிங் மீடியா லிமிடெட் 32.4%, ப்ளூ வோட்டர் எஸ்டேட் லிமிடெட் 11.75%, குகி இன்வெஸ்ட் லிமிடெட் 11.75%

**அணி மதிப்பு :** ரூ. 301 கோடி

**அணித்தலைவர் :** வோர்ன்

**ஏலமதிப்பு :** ரூ. 8 கோடி

**வீரர்கள் விபரம் :**

ஷேன் வோர்ன் (அணித்தலைவர்), டிராவிட், தைட், வோட்சன், போத்தா, கொலிங்வூட், ரோஸ் ரெய்லர், அஜின்கயா ரானே, திஷாந்த் ஹரேந்ரா, பங்கஜ் சிங், ஆகாஷ் சோப்ரா, தீபக்சாகர், அசோக் மெனரியா.

## இவர்கள் புதியவர்கள்

### பூனே



இம்முறை பூனே வாரியர்ஸ், கொச்சி டஸ்கர்ஸ் ஆகிய 2 அணிகள் களமிறங்குகின்றன. பூனே அணிக்கு யுவராஜ் சிங் அணித் தலைவராக உள்ளார். அணியில் றொபின் உத்தப்பா, சிமித், நதன் மெக்குலம், டிம்பெய்னி, செகரா, பார்னல், மத்யூஸ் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் உள்ளனர்.

உலகக்கிண்ண தொடரில் யுவராஜ் சிங் அசத்தியுள்ளதால் அவர் மீது எதிர்பார்ப்பு நிலவுகிறது.

**உரிமையாளர் :** சகாரா

**அணி மதிப்பு :** ரூ. 1702 கோடி

**அணித்தலைவர் :** யுவராஜ் சிங்

**அதிக ஏலத்தொகை வீரர் :** றொபின் உத்தப்பா

**ஏலமதிப்பு :** ரூ. 9 கோடி

**வீரர்கள் விபரம் :** யுவராஜ் சிங் (அணித்தலைவர்), மத்யூஸ், நாதன் மக்குலம், மார்ஷ், சிமித், றொபின் உத்தப்பா, பான்னெல், முரளி கார்த்திக், திவான் குல்கர்னி, டிம்பெய்னி, பெர்கூசன், ஜெரோம் ரெய்லர், கம்ரான் கான், நெகரா, அல்போன்சா தோமஸ், மனீஷ்பாண்டே.

### கொச்சி



கொச்சி அணி ஜெயவர்த்தன தலைமையில் களம் காண்கிறது. மக்குலம், ரவீந்திர ஜடேஜா, லக்ஸ்மன், பார்த்திவ் பட்டேல், ஆகியோரைத் தவிர சொல்லும்படியாக துடுப்பாட்ட வீரர்கள் யாரும் இல்லை. பந்து வீச்சில் ஸ்ரீசாந்த், ஆர்.பி.சிங், ஸ்டீவன் சிமித், முரளிதரன் உள்ளனர்.

**உரிமையாளர் :** ஆங்கர் யர்த் 31.4%, பரினி 30.6%, சிலிம் வேவ்ஸ் கம்பைன் 13.5%, ஆனந்த் ஷியாம் 9.5%, விவேக் வேணுகோபால் 5%, என்டவர்ஸ் ஸ்போர்ட்ஸ் வேல்ட் 10%

**அணி மதிப்பு :** ரூ. 1533.32 கோடி

**அணித்தலைவர் :** ஜெயவர்த்தன

**அதிக ஏலத்தொகை வீரர் :** ஜெயவர்த்தன

**ஏலமதிப்பு :** 6 கோடி

**வீரர்கள் விபரம் :** ஜெயவர்த்தன, பிரண்டன் மக்குலம், பார்த்திவ் பட்டேல், முரளிதரன், பெறைரா, ஹேஸ்டிங்க்ஸ், ரவீந்திர ஜடேஜா, ரமேஸ்பவார், வினய் குமார், லக்ஸ்மன், ஆர்.பி. சிங், ஸ்டீவன் சிமித், பிரெட் ஹாட்ஜ், ஸ்டீவன் கீர், ஓவிஷா, மைக்கெல் கிலிங்கர், டின்மே ஸ்ரீவத்சவா, ரிஷி கேஷ் கனித்கர்.

## சாதிக்கும் முனைப்பில் சென்னை




தோனி தலைமையிலான சென் னை சுப்பர் கிங்ஸ் அணி கடந்த முறை சம்பியனாகி அசத்தியது. அதற்கு முந்தைய தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்தது. அணியில் இம்முறை பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அதிரடி வீரர் டேவன் பிராவோ, நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ரிம் சௌத்தி, இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ராண்டீவ், நியூசி. சகலதுறை வீரர் ஸ்காட் ஸ்டைரிஸ் ஆகியோர் புதிதாக இணைந்துள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர்கள் ஹில்பன்ஸ்ஹாஸ், போலிங்கர் ஆகியோர் காயத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். அதிரடியில் கலக்க ரெய்னா, முரளி விஜய் தயாராக உள்ளனர். உலகக்கிண்ணம் வென்று அசத்தியுள்ளதால் தோனி மீதான எதிர்பார்ப்பு இந்த முறையும் அதிகமாக உள்ளது.

### சென்னை சுப்பர் கிங்ஸ்

**உரிமையாளர் :** இந்தியா சிமெண்ட்ஸ்

**அணி மதிப்பு :** ரூ. 409 கோடி

**அணித்தலைவர் :** தோனி

**ஏலதொகை :** ரூ. 8 கோடி

**வீரர்கள் விபரம் :**

தோனி (அணித்தலைவர்), சுரேஸ் ரெய்னா, அல்பி மோர்கல், பிராவோ, பத்திரிநாத், ஜோகிந்தர் சர்மா, சுராஜ் ராண்டீவ், ஷகதேப் ஜகதி, மைக்கெல் ஹசி, பொல்லிங்கர், ஸ்ரைரிஸ், குலசேகர, பெய்லி, முரளிவிஜய், விருதிமான்சகா, அஸ்வின், ஹில்பன்ஹயூஸ், சுதீப் தியாகி, பிளஸ்சிஸ்.

## சொல்லி அடிப்பாரா கில்லி



கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஐ.பி.எல். தொடர்களில் பெரிதாக ஒன்றும் சாதிக்கவில்லை. நட்சத்திர வீரர்கள் பலர் இருந்தும் 3 தொடர்களிலும் படுதோல்விகளைச் சந்தித்தது. தற்போது அந்த அணி முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புதிய அணித்தலைவராக கில்கிறிஸ்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை அணியில் ஆடிய டேவிட் ஹசி, டில்லி அணிக்காக ஆடிய தினேஸ் கார்த்திக், மும்பை அணியில் ஆடிய அபிஷேக் நாயர், மஸ்கரன்ஹஸ் ஆகியோர் இழுக்கப்பட்டுள்ளனர்.

துடுப்பாட்டத்தில் அதிரடி காட்ட மார்ஷ் தயாராக உள்ளார். கிறிஸ் பிரோட், பிரவீன்குமார், ரேயன்ஹரிஸ் பந்து வீச்சில் கலக்க ஆயத்தமாக உள்ளனர்.

### கிங்ஸ் லெவின் பஞ்சாப்

**உரிமையாளர்கள் :** பிரீத்தி ஜிந்தா 23%, நெஸ்வாடியா (இணை நிர்வாக இயக்குநர், பாம்பே டையிங்) 23%, கால்வே இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் 23%, விண்டி இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் 11.5%, எம்.பி பின்மார்ச் 11.5%, கரன்பால் 4%, ரூட் இன்வெஸ்ட்மென் பிரைவேட் லிமிடெட் 4%

**அணி மதிப்பு :** 342 கோடி

**அணித்தலைவர்:** கில்கிறிஸ்ட்

**அதிக ஏலத்தொகை வீரர் :** டேவிட் ஹசி

**ஏல மதிப்பு :** ரூ. 6.3 கோடி

**வீரர்கள் விபரம் :**

கில்கிறிஸ்ட் (அணித்தலைவர்), மார்ஷ், டேவிட் ஹசி, பிரோட், ஹரிஸ், தினேஸ் கார்த்திக், அபிஷேக் நாயர், பிரவீன் குமார், பியூஸ் சாவ்லா, மஸ்கரன்ஹஸ், நிதின் சாய்னி, விக்ரமஜித் மலிக், நாதன் ரிமிங்டன், சித்தார்த் சிட்னிஸ், சுலாப் ஸ்ரீவத்சவா, சன்னிசிங்.

# அமெரிக்கா– இலங்...

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்கள் கவலைக்குரியவை என்று அமெரிக்கக் காங்கிரஸ் நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவையின் வெளிவிவகாரக் குழுவின் முன்பாக விபரித்த அமெரிக்க அரசுத்துறையின் தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்காவுக்கு அதுகுறித்து மிகுந்த கரிசனை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சில விடயங்கள் மிகவும் மோசமாக மாறிவருவதாகக் கூறிய அவர் ஜனநாயக நிறுவனங்கள் அங்கு பலவீனமடைந்து செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுப் போரை இலங்கை அரசாங்கம் முடிபுக்குக் கொண்டுவந்த விதமானது அந்த அரசாங்கத்துடன் முழுமையாக ஈடுபாட்டுடன் இணைந்து செயற்படுவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் கொல்லப்பட்டமை போன்றவை உட்பட சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் அங்கு மீறப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு உரிய பொறுப்பேற்றல் அவசியம்.

இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின் அளவு குறுகியமை, தமிழர்கள் சிலரை பொலிஸ் படையில் சேர்த்தமை போன்றவை உட்பட நல்லிணக்கம் தொடர்பில் சில நல்ல நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அது தொடர்பில் இன்னமும் நிறையச் செய்யப்படவேண்டியுள்ளது என்றும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு தாம் பொறுப்பு அல்ல என்று வழமையாகவே மறுத்துவருவதுடன் ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வரும்வரை பொறுத்திருக்குமாறு விமர்சகர்களை கேட்டு வருகிறது.

தேசிய மட்டத்திலான நல்லிணக்கம் ஒன்றை எட்டுவதற்கு இலங்கைக்கு அவகாசம் தரப்படவேண்டும் என்று தற்போது லண்டனில் இருக்கும் இலங்கை வெளியுறவு அமைச்சரும் கூறியுள்ளார். (ச–5)

IBM கணினிகள் விற்பனைக்கு

Intel Pentium (LGA775) 2.8 GHz
512 MB DDR Ram
128MB VGA
80GB Sata
17"IBM LCD Monitor (Square)
DVD combo
Keyboard,Mouse, Speaker



Rs.18,500/=

Laptop Hard Disk:
40GB IDE-3250/=,60GB IDE- 3800/=,160GB SATA-3750/=
Desktop Hard Disk:
40GB IDE/SATA 1900/=,80GB IDE/SATA- 2500/=,160GB IDE/ SATA-3000/=
Mother Board:
478 Mother Board-2900/=, 775LGA Mother Board 3250/=

ASK Computers
No:50, Chetty Street Lane, Nallur, Jaffna.
Phone : 0778320896/0771350476
Skype ID : Ask_Chat
(சி-2890)

Diploma Courses
Upto 90% Discount.
Closing Date 08.04.2011
MCS
Supported By UNDP/JRRP

Ms Office - Rs.4000
Multimedia - Rs.6000
Accounting - Rs.6000
AutoCAD-2&3D - Rs.10800
Web Development - Rs.10800
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

Fast Track 01 Month
அனைத்து மாணவர்களுக்கும் Free
Dip. in English
ICDL
DTP
Accounting
ICT
(சி-2889)

60–வது பிறந்ததின வாழ்த்துக்கள்

அப்புத்துரை சுந்தரலிங்கம்
(அப்பன்)



நன்னாளாம் இப் பொன்னாளில்
ஆண்டு அறுபது அகவை தினத்தில்
தங்களின் அன்பும் ஆதரவும் தொடர்ந்து கிடைத்திட,
நீடூழி வாழ்கவென இறையாசி வேண்டி;
மயிலணி முருகனை வேண்டுகின்றோம்

இன்று (07.04.2011) தனது
இல்லத்தில் 60–வதுபிறந்ததினத்தை
கொண்டாடும் இவரை வாழ்த்துவோர்:
மனைவி: புனிதவதி,
பிள்ளைகள்: சுசீந்திரன், ஹரிகரன்,
ஆதித்தன்,
சகோதரிகள்: கனகேஸ்வரி, கனகமணி,
கருணாதேவி

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
(சி-2888)

கண்ணீர் அஞ்சலி

வேலுப்பிள்ளை சின்னத்தம்பி



எமது நிறுவனத்தில் பணியாற்றும் சி.சத்தியபாமா அவர்களின் அன்புத் தந்தையார் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வலம்புரிக் குடும்பம்.

(இ)

# இரணைமடுச் சந்தி...

தினரை கிளிநொச்சியில் கல் ஏற்றிக் கொண்டு சென்ற டிப்பர் ரக வாகனம் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டிவந்த சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பின்னால் உட்கார்ந்து வந்த சிப்பாய் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்தவர் கிளிநொச்சிப் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச–5)

# நெடுந்தீவுக்...

கடற்படையினர் தேடுதல் நடத்தியதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

அதேவேளை கடற்றொழிலுக்குச் சென்ற நெடுந்தீவு கடற்றொழிலாளர்கள் சிலரைக் காணவில்லை என ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன. (எ)

# அரசுடனான பேச்சுவா...

தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கவுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுகள், அதிகாரப் பகிர்வின் அடிப்படைகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் சில அமைச்சர்கள் அண்மைக் காலங்களில் வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் தொடர்பாகவே அவர் சந்தேகமும் விசனமும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் உள்ளார்த்தமும் மற்றும் தீர்க்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் எதுவுமே அறியாத, குறிப்பாக பேச்சுவார்த்தைகளுடன் சம்பந்தமேயில்லாத ஒருசில அமைச்சர்கள் சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறி பேச்சுவார்த்தைகளை குழப்பியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்ற நல்லெண்ண அடிப்படையிலேயே கூட்டமைப்பும் அரசாங்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையிலேயே கடந்த ஒருவார காலத்திற்குள் அமைச்சர்கள் சிலரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் இப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் விதமாகவே அமைந்துள்ளன.

அதிகாரங்கள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பட்சத்தில் மட்டுமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண முடியும். மாகாண சபையாக இருந்தாலும் சரி உள்ளூராட்சி சபையாக இருந்தாலும் சரி அந்தந்த சபைக்கான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாகாண சபைகளுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கவேண்டும் அப்படி அதிகாரங்கள் வழங்காது விட்டால் அச்சபைகள் இயங்குவதில் அர்த்தமில்லை. அது மட்டுமல்லாது பேச்சுக்களும் அர்த்தமுடையதாக அமையாது. அது நடைமுறைக்குச் சாத்தியமாகவும் அமையாது என அவர் மேலும் கூறினார். (ச–5)

# வெளிவிவகார அமை...

கமோ எவ்வித தகவலையும் வெளிவிடாத நிலையில் இச் சந்திப்பு இடம் பெற்றதாக அவர் கூறினார்.

நிபுணர்கள் குழுவுடன் அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் லியன் பஸ்கோவும் கலந்து கொண்ட இச் சந்திப்பில் சட்டமா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டதாக பீரிஸ் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் இச் சந்திப்பு இடம்பெற்ற வேளையில் இலங்கை வெளிவிவகாரச் செயலாளராக இருந்த றொமேஸ் ஜெயசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன மற்றும் பிரதி நிரந்தரப் பிரதிநி மேஜர் ஜெனரல் சவேந்திர டீ சில்வா ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை புகைப்படங்களுடன் செய்தி வெளியிட்டிருந்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் இலங்கையின் தூதுக்குழு நிபுணர்கள் குழுவுக்கு விளக்கியதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# இந்தியா சென்ற ஜனாதி...

காண ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராகினார்.

எனினும் போட்டியைக் காணச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இந்தியாவில் உரிய மரியாதைகள் அளிக்கப்படவில்லை என உப்பெக்கா சமரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவில் வைத்து இலங்கை கிரிக்கெட் அணியைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதி கோரியிருந்த போதிலும் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணியுடன் இருந்து புகைப்படம் எடுக்கவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான் மற்றும் இந்திய துடுப்பாட்ட அணிகளுக்கு இடையிலான அரையிறுதிப் போட்டியைக் காண வருமாறு பாகிஸ்தான் பிரதமருக்கு இந்தியா உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்திருந்ததினால் அவர் முறையாகக் கவனிக்கப்பட்டதாக இந்தியா பதிலளித்துள்ளது.

எனினும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பின்றி தனிப்பட்ட ரீதியில் இந்தியாவுக்கு வந்ததன் காரணமாகவே அவரை அரச மரியாதைகளுடன் கவனிக்க முடியவில்லை என இந்திய கிரிக்கெட் வாரியத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ரட்னகார் செட்டி தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிய முறையில் கவனிக்கப்படாமை குறித்து இந்திய அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான தூதுவர் பிரசாத் காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.